உ

கடவுள் துணை.

மதுரைத்தமிழாசிரியர் மாக்காயனார்மாணாக்கர்

கணிமேதாவியார்

அருளிச்செய்த

# திணைமாலை நூற்றைம்பது

## மூலமும் உரையும்

[இரண்டாம் பதிப்பு.]

சேதுஸம்ஸ்தான வித்வானும்

"செந்தமிழ்"ப் பத்திராசிரியருமான

## ரா. இராகவையங்காரால்

பதிப்பிக்கப்பெற்றன.

"செந்தமிழ்"ப் பிரசுரம்.—[illegible].

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1927.

விஷயசூசிகை


... உசு
... சஎ
ார் ... ச
... அ
... உகூ
... சரு
... கூ, உஅ, ௩ச
... ௩க
... உ0
... கசு
... கக
ருதல் ... ... க
... ... உ0

7059

உ

கடவுள் துணை.

## மாறன்பொறையனார்

அருளிச்செய்த

# *ஐந்திணையைம்பது

## மூலமும் உரையும்.

---

### பாயிரம்.

பண்புள்ளி நின்ற பெரியார் பயன்றெரிய
வண்புள்ளி மாறன் பொறையன் புணர்த்தியாத்த
வைந்திணை யைம்பது மார்வத்தி னோதாதார்
செந்தமிழ் சேரா தவர்.

---

### க.—முல்லை.

க மல்லர்க் கடந்தா னிறம்போன் றிருண்டெழுந்து
செல்வக் கடம்பமர்ந்தான் வேன்மின்னி—நல்லா
யியங்கெயி லெய்தவன் றார்பூப்ப வீதோ
மயங்கி வலனேருங் கார்.

தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.

இதன்பொருள். மல்லரைவென்றவன் நிறம்போல இருளைச்செய்தெழுந்து செல்வக் கடப்பந்தாரினை விரும்பினான் வேல்போல மின்னி விசும்பின் இயங்குகின்ற மூப்புரங்களை யெய்தவன் கொன்றைத்தார் பூப்ப மிடைந்து எழாநின்றது நல்லாய்! இக்கார் என்றவாறு. (க)

---

* இஃது சங்கத்தாராற் றொகுக்கப்பட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

௨ *அணிநிற மஞ்ஞை யகவ விரங்கி
மணிநிற மாமலைமேற் றாழ்ந்து—பணிமொழி
கார்நீர்மை கொண்ட கலிவானங் காண்டொறும்
பீர்நீர்மை கொண்டன தோள்.

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(இ-ள்) அழகிய நிறத்தையுடைய மயில்களழைக்க முழங்கி நீலமணி நிறத்தையுடைய மாமலைகளின்கட் படிந்து, மெல்லிய மொழியையுடையாய்! கார்காலத்துத் தன்மையைக் கொண்ட மிக்க முகில்களைக் காணுந்தோறும் என்றோள்கள் பீரின் தன்மையைக் கொண்டன எ-று. (௨)

௩ மின்னு முழக்கு மிடியுமற் றின்ன
கொலைப்படை சாலப் பரப்பிய முல்லை
முகைவென்ற பல்லினா யில்லையோ மற்று
நமர்சென்ற நாட்டுளிக் கார்.

பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

(இ-ள்) நமர்சென்ற நாட்டின்கண் மின்னும் முழக்கும் இடியும் என்றுசொல்லப்பட்ட இக்கொலைப் படைகளை நிரம்பப் பரப்புதற்கு இக்காரில்லையோ முல்லை முகை வென்ற பல்லினாய்! எ-று. (௩)

௪ உள்ளார்கொல் காதல ரொண்டொடி நந்திறம்
வள்வார் முரசின் குரல்போ லிடித்துரறி
நல்லார் மனங்கவரத் தோன்றிப் பணிமொழியைக்
கொல்வாங்குக் கூர்ந்ததிக் கார்.

இதுவுமது.

(இ-ள்) நந்திறத்தைக் காதலர் உள்ளார் கொல்லோ ஒண்டொடி! தோலார்ந்த முரசின் குரலினோசைபோல இடித்து முழங்கித் தங்கொழுநரைப்

---

* இச்செய்யுளைப் பருவங்கண்டு பெருமகள் புலம்பற்கு உதாரணங் காட்டுவர் அகப்பொருள்விளக்கவுரைகாரர். (களவியல், ௫௩.)

பிரிந்த நல்லார் மனங்கவரும்படி தோன்றி நங்காதலர் சொன்ன இன்சொல்லைச் சிதைப்பதுபோல மிக்கது இக்கார் எ-று. (ச)

ரு கோடுயர் தோற்ற மலைமே லிருங்கொண்மூக்
கூடி நிரந்து தலைபிணங்கி—யோடி
வளிகலந்து வந்துறைக்கும் வானங்காண் டோறுந்
துளிகலந்து வீழ்தருங் கண்.

இதுவுமது.

(இ-ள்) குவடுகளுயர்ந்த தோற்றத்தையுடைய மலைகண்மேற் பெருமுகில்கள் திரண்டு மிடைந்து ஒன்றோடொன்று பிணங்கியோடிக் காற்றோடு கலந்து பெய்கின்ற விசும்பு காணுந்தோறும் துளிகலந்து பெய்யாநின்றன என்கண்கள் எ-று. (ரு)

சு முல்லை நறுமல ரூதி யிருந்தும்பி
செல்சார் வுடையார்க் கினியவாய்—நல்லாய்மற்
றியாருமின் னெஞ்சினே மாகி யுறைவேமை
யீரு மிருண்மாலை வந்து.

இதுவுமது.

(இ-ள்) நல்லாய்! இருந்தும்பி முல்லைநறுமலரை ஊதுதலாற் றமக்குச் செல்சார்வாகிய கொழுநரையுடையார்க்கு இன்பத்தைச் செய்வனவாய் யாரும் துணையில்லாத நெஞ்சினேமாகி உறைவேமை இருண்மாலை வந்து ஈராநின்றது எ-று. (சு)

எ தேரோன் மலைமறைந்த செக்கர்கொள் புன்மாலை
யாரான்பி னாய னுவந்தூதுஞ்—சீர்சால்
சிறுகுழ லோசை செறிதொடி வேல்கொண்
டெறிவது போலு மெனக்கு.

இதுவுமது.

(இ-ள்) தேரினையுடைய பகலவன் மலையின்கண் மறைந்த செக்கர் கொண்ட புன்மாலையின்கண் அரிய ஆனிரையின் பின்னே ஆயன் விரும்பி ஊதுஞ் சீரமைந்த சிறுகுழல் இன்னோசை, வேல்கொண்டு எறிவது போலாநின்றது செறிதொடி! எனக்கு எ-று. (எ)

அ பிரிந்தவர் மேனிபோற் புல்லென்ற வள்ளி
பொருந்தினர் மேனிபோற் பொற்பத்—திருந்திழாய்
வானம் பொழியவும் வாரார்கொ லின்னாத
கானங் கடந்துசென் றார்.

இதுவுமது.

(இ-ள்) துணைவரைப் பிரிந்தார் மேனிபோலப் புற்கென்ற வள்ளிகள், துணைவரோடு பொருந்தியிருந்தார் மேனிபோலப் பொலிவு தோன்றும் வகை வானம் பொழியவும் வாரார்கொல்லோ, திருந்திழாய்! இன்னாத கானங்களைக் கடந்துசென்றார் எ-று. (அ)

கூ வருவர் வயங்கிழாய் வாளொண்க ணீர்கொண்
டுருகி யுடன்றழிய வேண்டா—தெரிதியேற்
பைங்கொடி முல்லை யவிழரும் பீன்றன
வம்ப மழையுறக் கேட்டு.

பருவமென்றழிந்த கிழத்தியைத் தோழி
பருவமன்றென்று வற்புறுத்தியது.

(இ-ள்) விளங்கிய இழைகளையுடையாய்! நங்காதலர் பருவம் வந்தால் வருவர்; வாளினை ஒக்கும் நின்கண்கள் நீர்கொள்ள நீயுருகி மாறுபட்டு அழியவேண்டா; ஆராய்வாயாயிற் றன்பருவமல்லாமையின் நிலையில்லாத முழக்கம் கேட்டுப் பைங்கொடி முல்லைகள் அவிழரும்பு ஈன்றனகாண் எ-று. (கூ)

௧0 நூனவின்ற பாகதேர் நொவ்விதாச் சென்றீக
தேனவின்ற கானத் தெழினோக்கித்—தானவின்ற
கற்புத்தாள் வீழ்த்துக் கவுண்மிசைக் கையூன்றி
நிற்பா ணிலையுணர்கம் யாம்.

வினைமுற்றிய தலைமகன்
தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

(இ-ள்) நூல்பயின்ற பாகனே! நின்றேர் கடிதாகச் செல்வதாக; தேன் பயின்ற காட்டினது அழகை நோக்கித் தான்பயின்ற கற்பென்னுநின்ற தாளினைச் செறித்து உயிர்காத்துக் கவுளின்மிசைக் கையூன்றி நிற்பாளது நிலைமையை நாம்சென்று அறிவாம் எ-று. (௧0)

முல்லை முடிந்தது.

# உ.—குறிஞ்சி.

கக பொன்னிணர் வேங்கை கவினிய பூம்பொழிலு
ணன்மலை நாட னலம்புனைய—மென்முலையாய்
போயின சின்னாள் புனத்து மறைவினு
லேயினு மின்றி யினிது.

பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி
தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் செறிப்பறிவுறீஇயது.

(இ-ள்) பொன்போன்ற பூங்கொத்தையுடைய வேங்கைகள் அழகு பெற்ற பூம்பொழிலின்கண் வந்து நன்மலைநாடன் நினது நலத்தினைப் புனையக் கழிந்தன சிலநாள்; புனத்தின்கட் களவினான் எதிர்ப்பட்டோ ரின்றி இடையூறின்றியே யினிதாக எ-று. (க)

கஉ மால்வரை வெற்ப வணங்கு குரலேனல்
காவ லியற்கை யொழிந்தேம்யாம்—தூவருவி
பூக்கண் கழூஉம் புறவிற்றாய்ப் பொன்விளையும்
பாக்க மிதுவெம் மிடம்.

பகற்குறிவந்து பெயர்கின்ற தலைமகனைக்
கண்ணுற்றுத் தோழி செறிப்பறிவுறீஇயது.

(இ-ள்) பெரிய குவடுகளையுடைய வெற்பனே! வளைந்த கதிர்களை யுடைய பசுந்தினையைக் காத்தல் யாமொழிந்தேம்; தூவருவிகள் பூவின் கண்களைக் கழுவுகின்ற காட்டினை யுடைத்தாய்ப் பொன்விளையும் இப்பாக்கம் எம்முடைய இடமாதலான், நீயிங்கே வரக்கூடின் வருவாயாக எ-று. (உ)

கங கானக நாடன் கலவானென் றேளென்று
மானமர் கண்ணாய் மயங்கனீ—நானங்
கலந்திழியு நன்மலைமேல் வாலருவி யாடப்
புலம்பு மகன்றுநில் லா.

சிறைப்புறத்தானாகத் தலைமகனை யியற்பழித்த
தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

(இ-ள்) கானகநாடன் என்றோளைப் புணரானென்று சொல்லி, மான் போன்ற மதர்த்த கண்ணினையுடையாய்! அறிவு கெடா தொழிவாயாக;

பலநறுவிரைகளையுங் கலந்து இழியாநின்ற நன்மலையின்கண் உள்ள வாலிய அருவியையாட என்றோள்களின்கட் புலம்பும் நீங்கி நில்லாது எ-று. (ங)

கச புனைபூந் தழையல்குற் பொன்னன்னாய் சாரற்
றினைகாத் திருந்தேம்யா மாக—வினைவாய்த்து
மாவினவு வார்போல வந்தவர் நம்மாட்டுத்
தாம்வினவ லுற்றதொன் றுண்டு.

தோழி தலைமகட்கு மெலிதாகச்
சொல்லிக் குறைநயப்புக்கூறியது.

(இ-ள்) செய்யப்பட்ட பூந்தழைகளான் அணியப்பட்ட அல்குலினையுடைய பொன்னன்னாய்! மலைச்சாரலின்கட் டினையைக் காத்து நாம் இருந்தேமாக, வினையை வாய்க்கச்செய்து ஒருமாவினவுவார்போல வந்தாரொருவர் நம்மாட்டுத் தாம் வினவலுற்ற பிறிதொன்று உண்டு எ-று. (ச)

கரு * வேங்கை நறுமலர் வெற்பிடை யாங்கொய்து
மாந்தளிர் மேனி வியர்ப்பமற்—றுங்கெணைத்தும்
பாய்ந்தருவி யாடினே மாகப் பணிமொழிக்குச்
சேந்தனவாஞ் சேயரிக்கண் டாம்.

பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத்
தோழி தாய்கேட்டதற்கு மறுமாற்றஞ் சொல்லுவாள்
போலப் படைத்துமொழிகிளவியான் வரைவுகடாயது.

(இ-ள்) வெற்பின்கண் வேங்கைமலரையுங் கொய்து நின்மகள் மாந்தளிர்மேனி வியர்த்தலான் அவ்விடத்து எல்லாவருவியும் பாய்ந்தாடினேமாகப் பணிமொழியையுடையாட்குச் சேயரிக்கண்டாம் சிவந்தன காண் எ-று. (ரு)

கசா கொடுவரி வேங்கை பிழைத்துக்கோட் பட்டு
மடிசெவி வேழ மிரீஇ—யடியோசை
யஞ்சி யொதுங்கு மதருள்ளி யாரிருட்
டுஞ்சா சுடர்த்தொடி கண்.

---

* இதனை "ஐயச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப், பொய்யென மாற்றி மெய்வழி கொடுப்பினும்" என்பதற்கு உதாரணங்காட்டுவர் நச்சினார்க்கினியர். (தொல், பொரு, கள, உங.)

இரவுக்குறிவந்து பெயருந் தலைமகனைக்
கண்ணுற்றுநின்ற தோழி வரைவுகடாயது.

(இ-ள்) கொலைவரி வேங்கையாற் கோட்பட்டுப் பிழைத்து மடிந்த செவியையுடைய வேழம் பிரிந்து தன்னடியோசையைப் புலி கேட்குமென்று அஞ்சி மெல்ல நடக்கும் வழியை நினைந்து, கங்குலின்கட் சுடர்த்தொடியையுடையாள் கண் துயிலா எ-று. (௬)

கஎ மஞ்சிவர் சோலை வளமலை நன்னாட
வெஞ்சாது நீவருதி யென்றெண்ணி—யஞ்சித்
திருவொடுங்கு மென்சாயற் றேங்கோதை மாத
ருருவொடுங்கு முள்ளுருகி நின்று.

இதுவுமது.

(இ-ள்) முகில் படாநின்ற சோலையையுடைய வளமலைநாடனே! ஒருநாள் ஒழியாது இரவின்கண் நீ வாராநின்றாய் என்று எண்ணித், திருவொடுங்கு மென்சாயற் றேங்கோதை மாதர் அஞ்சி யுள்ளுருகி நின்று தன்மேனி மெலியா நின்றாள் எ-று. (எ)

கஅ *எறிந்தெமர் தாமுழுத வீர்ங்குர லேனன்
மறந்துங் கிளியினமும் வாரா—கறங்கருவி
மாமலை நாட மடமொழி தன்கேண்மை
நீமறவ னெஞ்சத்துக் கொண்டு.

தோழி செறிப்பறிவுறீஇத் தலைமகனை வரைவுகடாயது.

(இ-ள்) காடெறிந்து எமர்தாமுழுத ஈர்ங்குரல் ஏனலின்கண் மறந்தாயினுங் கிளியினமும் நாங்களும் வாரோம்; கறங்கருவியினையுடைய மாமலைநாடனே! மடமொழியோடு நீ கொண்ட கேண்மையை நின்னெஞ்சத்துக் கொண்டு மறவாயாக எ-று. (அ)

ககூ † நெடுமலை நன்னாட நீள்வே லுணையாக்
கடுவிசை வாலருவி நீந்தி—நடுவிரு

---

* இதனை "ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்" என்புழி எடுத்தோதினர் நச்சினார்க்கினியர். (தொல், பொரு, களா, உங.) அகப்பொருள் விளக்கவுரைகாரரும் பாங்கி தலைமகனை முன்னின்று செறிப்புணர்த்தி ஓம்படை சாற்றற்கு உதாரணங்காட்டுவர். (களவியல், ௩௰அ.)

† இது இரவுக்குறி விலக்கியது என்றார் நச்சினார்க்கினியரும். (தொல், பொரு, களா, உங.)

னின்னா வதர்வர வீர்ங்கோதை மாதரா
ளென்னாவா ளென்னுமென் னெஞ்சு.

தோழி இரவுக்குறியின்கண்
நெறிவிலக்கி வரைவுகடாயது.

(இ - ள்) நெடுமலை நன்னாடனே! நீள்வேலை துணையாகக் கடிய விசையையுடைய வாலருவியை நீந்தி, நடுவிருளின்கண் இன்னாத வழியின்கண் நீவர, ஈர்ங்கோதை மாதராள் எப்பெற்றியாவாளோ என்று தடுமாறுநிற்கும் என்னெஞ்சு எ-று. (௧௯)

௨0 *வெறிகமழ் வெற்பனென் மெய்ந்நீர்மை கொண்ட
தறியாண்மற் றன்னோ வணங்கணங்கிற் றென்று
மறியீர்த் துதிரந்தூய் வேலற் றரீஇ
வெறியோ டலம்வரும் யாய்.

தலைமகள் தோழிக்கு அறத்தோடுநின்று
வெறிவிலக்கவேண்டும் உள்ளத்தாளாய்ச் சொல்லியது.

(இ - ள்) விரைகமழாநின்ற வெற்பன் எனதுமெய்யின்கண் உள்ள நீர்மையைக் கொண்டது அறியாளாய், அந்தோ தெய்வம் என்னை வருத்திற்று என்று வேலனைத் தந்து மறியை யறுத்து உதிரத்தைத் தூவி வெறியோடே வருந்தாநின்றாள் அன்னை எ-று. (௨0)

குறிஞ்சி முடிந்தது.

---

## ௩—மருதம்.

௨௧ கொண்டுழிப் பண்டர் விலையொரீஇக் ‡ கொற்சேரி
நுண்டுளைத் துன்னூசி விற்பாரி—னென்றானும்
வேறல்லை பாணா வியலூரன் வாய்மொழியைத்
தேற வெமக்குரைப்பாய் நீ.

பாணற்குத் தலைமகள் வாயின்மறுத்தது.

---

* இது வெறியச்சுறுத்தியது என்பர் நச்சினார்க்கினியர். (தொல், பொரு, கள, ௨௩.) அகப்பொருள்விளக்கவுரைகாரரும் வெறிவிலக்கிற்கு உதாரணம் காட்டினர். (களவியல், ௩௮)

‡ "வைகொண்ட வூசிகொற் சேரியின் விற்றெம்மில் வண்ணவண்ணப், பொய்கொண்டு நிற்கலுற் றோபுலை யாத்தின்னி போந்ததுவே" என்றார் திருச்சிற்றம்பலக்கோவையினும். (௩௮௯)

(இ - ள்) பண்டங் கொண்ட விலையை வேறுபடுத்துக் கொற்சேரியின் கண் நண்ணிய துளையையுடைய ஊசியை விற்றுத்திரிவாரின் யாதாலும் வேறல்ல; பாண! வியலூரான் வாய்மொழியைத் தெளிய எமக்கு உரைக்கின்ற நீ எ-று. (க)

உஉ போதார்வண் டூதும் புனல்வய லூரற்குத்
தூதாய்த் திரிதரும் பாண்மகனே—நீதா
னறிவயர்ந் தெம்மில்லு ளென்செய்ய வந்தாய்
நெறியதுகா ணெங்கைய ரிற்கு.

இதுவுமது.

(இ - ள்) மலர்களை நுகராநின்ற வண்டுகள் ஊதும் புனல்வயலூரற்குத் தூதாய் உழல்கின்ற பாண்மகனே! நீதான் அறிவு கலங்கி எங்கள் மனையுள் என்செய்யவந்தாய்? எங்கையர் மனைக்கு வழி அதுகாண் எ-று. (உ)

உரு யாண ரகல்வய லூர னருளுதல்
பாண பரிந்துரைக்க வேண்டுமோ—மாண
வறிவ தறியு மறிவினார் கேண்மை
நெறியே யுரையாதோ மற்று.

இதுவுமது.

(இ - ள்) வளமையுடைய அகல்வயலூரன் எமக்கு அருளுடையன் என்பதனைப், பாணனே! நீ காதலித்து உரைக்க வேண்டுமோ? மாட்சிப்பட அறியக்கடவதனையறியும் அறிவினையுடையார் செய்யும் நட்புநெறியை அவர் அருளுடைமையே உரையாதோ? எ-று. (ரு)

உச கோலச் சிறுகுருகின் குத்தஞ்சி யீர்வாளை
நீலத்துப் புக்கொளிக்கு மூரற்கு—மேலெலாஞ்
சார்தற்குச் சந்தனச்சாந் தாயினே மிப்பருவங்
காரத்தின் வெய்யவென் றோள்.

இதுவுமது.

(இ - ள்) அழகிய சிறுகுருகின் குத்தினையஞ்சிக் குளிர்ந்தவாளை நீலமலரின்கட் புக்கு ஒளிக்கும் ஊரினையுடையாற்குப், பண்டெல்லாம் புணர்தற்

குச் சந்தனக்குழம்பாயினேம்; இக்காலம் புண்ணிற்கு இடுங் காரம் போல வெய்யவாம் எம்முடைய தோள் எ-று. (௪)

௨௫ அழலவிழ் தாமரை யாய்வய லூரன்
விழைதகு மார்ப முறுநோய்—விழையிற்
குழலுங் குடுமியென் பாலகன் கூறு
மழலைவாய்க் கட்டுரை யால்.

வாயில்வேண்டிச் சென்றார்க்குத்
தலைமகள் வாயின்மறுத்தது.

(இ-ள்) அழல்போல அவிழுந் தாமரைகளையுடைய ஆய்வயலூரனுடைய கண்டார் விழையப்பட்ட மார்பந் தன்புறுநிற்கும்; குழலுங் குடுமியென் பாலகன் கூறும் மழலைவாய்க் கட்டுரையான் எம்மைவிரும்பிப் புணருமாயின் எ-று. (௫)

௨௬ பெய்வளைக் கையாய் பெருநகை யாகின்றே
செய்வய லூரன் வதுவை விழவியம்பக்
கைபுனை தேரேறிச் செல்வானைச் சென்றிவ
னெய்தி யிடருற்ற வாறு.

புதல்வனை முனிந்து தலைமகன் மறுத்தானைப் போலத்
தோழிக்கு வாயினேர்ந்தது.

(இ-ள்) பெய்வளையினையுடைய கையாய்! எனக்குப் பெரிய நகையாகாநின்றது; செய்த வயல்களையுடைய ஊரன், பரத்தையர் புதுமணங்களின் உள்ள முழவு ஒலித்தலாற் கைபுனை தேரேறிச் செல்வானை இப்புதல்வன் கண்டு சென்று எய்த, அவ்வூரன் புதுமணம் புணரப் பெறாது இடருற்றவாறு எ-று. (௬)

௨௭ தண்வய லூரற் புலக்குந் தகையமோ
நுண்ணறல் போல நுணங்கிய வைங்கூந்தல்
வெண்மரற் போல நிறந்திரிந்து வேறாய
வண்ண முடையேமற் றியாம்.

வாயில் வேண்டிச் சென்றார்க்குத்
தலைமகள் வாயின்மறுத்தது.

(இ-ள்) தண்வயல் ஊரனை ஊடுந் தகையமோ? நுண்ணிய அறல் மண்ற்

போலும் தனுகிய ஐவகைப்பட்ட கூந்தல் வெள்ளை மாற்போலத் தன்னிறந் திரிந்து வேறுபட்ட நிறத்தையுடையேம் ஆதலான் எ-று. (எ)

உஅ ஒல்லென் றொலிக்கு மொலிபுன லூரற்கு
வல்லென்ற தென்னெஞ்சம் வாட்கண்ணாய்—நில்லென்னா
தேக்கற்றுங் கென்மகன் றானிற்ப வென்னானு
நோக்கான்றே ரூர்ந்தது கண்டு.

தலைமகள் தோழிக்கு வாயின்மறுத்தது.

(இ-ள்) ஒலிபுனலையுடைத்தாய்ப் பிறவோசையானும் ஒல்லென்றொலிக்கும் ஊரற்கு என்னெஞ்சம் நெகிழாது வலிதாயிற்று; வாட்கண்ணாய்! புதல்வன் தன்னை விரும்பிநிற்பக் கண்டுவைத்துப் பாகனை நில்லென்று சொல்லாதே என் புதல்வனையும் பின்பாராதே தேரூர்ந்து பரத்தையர் மனைக்குச் சென்றது கண்டு எ-று. (அ)

உகூ ஒல்லென் னொலிபுன லூரன் வியன்மார்பம்
புல்லேன்யா னென்பேன் புனையிழையாய்—புல்லே
னெனக்கோர் குறிப்பு முடையனோ வூரன்
றனக்கேவல் செய்தொழுகு வேன்.

ஆற்றாமையே வாயிலாகப்புக்க தலைமகன் புணர்ந்து
நீங்கியபின்பு சென்ற தோழிக்குத்
தலைமகள் சொல்லியது.

(இ-ள்) ஒலிபுனலையுடைத்தாய்ப் பிறவோசையான் ஒல்லென்னும் ஊரனுடைய அகன்ற மார்பத்தினை யான் முயங்கேன் என்றுசொல்லி அவனைக் காணுதமுன் நினைத்திருப்பேன்; புனையிழையாய்! அவனைக்கண்டபின் முயங்கேனுதற்கு எனக்கெனப் பெற்ற கருமம் உடையேனோ? ஊரன்றனக்கு ஏவல் செய்து ஒழுகுவேன் ஆதலான் எ-று. (கூ)

கூ0 குளிரும் பருவத்தே யாயினுந் தென்றல்
வளிபெறின் மெய்யிற் கினிதா—மொளியிழா
யூடி யிருப்பினு மூர னறுமேனி
கூட லினிதா மெனக்கு.

இதுவுமது.

(இ-ள்) குளிருங் காலத்தேயாயினும் தென்றற்காற்று எறியின் உடம்பிற்கு இனிதாம்; அதுபோல, ஒளியிழாய்! யான் அவனைப் புலந்திருந்தேன் ஆயினும், அவ்வூரன் அழகிய நாற்றத்தினையுடைய மேனியைக்கூடுதல் இனிதாம் எனக்கு எ-று. (௪௦)

மருதம் முடிந்தது.

---

## ௪.—பாலை.

௩௧ * உதிரந் துவரிய வேங்கை யுகிர்போ
லெதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க—வெதிருநர்க்
கின்பம் பயந்த விளவேனில் காண்டொறுந்
துன்பங் கலந்தழியு நெஞ்சு.

பருவங்கண்டழிந்த தலைமகள்
தோழிக்குச் சொல்லியது.

(இ-ள்) உதிரத்தையளைந்து துவரிய புலியினது உகிர்போலப் பருவத்தையெதிர்ந்து முருக்குக்கள் அரும்ப, ஈர்ந்தண் முகில் நீங்கக், காதலர்

---

* இவ்வெண்பாவினுள் இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தமைக்கிலக்கணம், "வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும், ஐஞ்சீ ரடியு முளவென மொழிப" என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்துப் பேராசிரியர், "வெண்டளை விரவியும், ஆசிரியம் விரவியும் என்றது என்னையெனின்—அவ்வைஞ்சீரடி வெண்பாவோடு விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் வரும் என்றவாறு" எனவும், "கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க, வொண்செங் குருதியி னோடு கிடப்பதே—கெண்டிக், கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பன்னு, ளழுதகண் ணீர்துடைத்த கை" என்னும் வெண்பாவினுள் இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தது" எனவும் கூறியவாற்றானும், நச்சினார்க்கினியர், "வெண்பாவோடுங் கலிப்பாவோடும் விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் வரும் ஐஞ்சீரடிகளுமுள என்று கூறுவர் புலவர் எ-று." எனவும், " கண்டகம் பற்றி..................கை " " கிடங்கிற் கிடங்கிற் கிடந்த கயலைத், தடங்கட்டடங்கட்டளிரியல்கொள்ளாள்—கிடக்கில், வளையாற் பொலிந்தகை வையெயிற்றுச் செவ்வா, யிளையாடன் கண்ணுக்கு மென்று" இவற்றுள் இரண்டாமடி ஐஞ்சீரடி வந்தவாறுகாண்க" எனவும் கூறியவாற்றானும் உணர்க.

தம்முட்டலைப்பட்டார்க்கு இன்பத்தைக் கொடுத்த இளவேனிலைக் காணுந்தோறுந் துன்பத்தோடு புணர்ந்து அழியாநின்றது என்னெஞ்சு. எ-று. (௧)

௩௨ விலங்கல் விளங்கிழாய் செல்வாரோ வல்ல
ரழற்பட் டசைந்த பிடியை—யெழிற்களிறு
கற்சுனைச் சேற்றிடைச் சின்னீரைக் கையாற்கொண்
டுச்சி யொழுக்குஞ் சுரம்.

தலைமகனது பிரிவுக்குறிப்பறிந்தாற்றாளாய
தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.

(இ-ள்) அவர் செலவினை விலங்காதொழிக; விளங்கிய இழையினையுடையாய்! செல்லமாட்டார்; காட்டழற்பட்டு வருந்திய பிடியினை அதனது எழிற்களிறு கற்சுனைச் சேற்றிடையுள்ள சின்னீரைத் தன் கையாலே கொண்டு அப்பிடியின் உச்சியின்கண் ஒழுக்குஞ் சுரத்தை எ-று. (௨)

௩௩ பாவையும் பந்தும் பவளவாய்ப் பைங்கிளியு
மாயமு மொன்று நினைவினையாள்—பால்போலு
மாய்ந்த மொழியினாள் செல்லுங்கொல் காதலன்பின்
காய்ந்து கதிர்தெறூஉங் காடு.

மகட்போக்கியநற்றாய் கவன்று சொல்லியது.

(இ-ள்) பாவையையும், பந்தையும், பவளம்போன்ற வாயையுடைய பசுங்கிளியையும், ஆயத்தையும் இவற்றை ஒன்றும் நினையாளாய்ப், பால்போலும் இனமொழியையுடையாள், தன் காதலன்பின் செல்லுங்கொல்லோ! கனன்று பகலோன் சுடுகின்ற காட்டினை எ-று. (௩)

௩௪ கோட்டமை வல்விற் கொலைபிரியா வன்கண்ண
ராட்டிவிட் டாறலைக்கு மத்தம் பலநீந்தி
வேட்ட முனைவயிற் சேறிரோ வையநீர்
வாட்டடங்கண் மாதரை நீத்து.

தோழி தலைமகனைச் செலவழுங்கியது.

(இ-ள்) கோட்டுகின்ற மூங்கில்விற்கொலையை இடையறாத வன்கண்மையையுடையார் ஆறலைத்து ஓட்டி வழியின்கண் நின்று அலைக்குங் கடறுகள் பலவற்றையு நீந்தி, வேட்டினையுடைய் வெம்முனையின்கட் செல்வீரோ? ஐய! நீர் வாட்டடங்கண் மாதரைத் துறந்து எ-று. (௪)

௩௫ கொடுவி லெயினர் தங் கொல்படையால் வீழ்ந்த
தடிகிணை மாந்திய பேஎய்—நடுகல்
விரிநிழற் கண்படுக்கும் வெங்கான மென்பர்
பொருள்புரிந்தார் போய சுரம்.

தலைமகன் பொருள்வயிற் பிரிந்த காலத்து
ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலை
மகள் ஆற்றுவலென்பதுபட மொழிந்தது.

(இ - ள்) கோட்டிய வில்லினையுடைய வேட்டுவர் தங்கொல்படையானே வீழ்ந்த தசையையும் நிணத்தையுந் தின்ற பேய்கள், போரின்கட்பட்டார் பெயர்பொறித்து நட்ட கல்லின் விரிநிழற்றுயிலும் வெய்ய காடென்று சொல்லுவர்; தோழி! பொருள் விரும்பினோர் போகிய கடறு எ-று. (ரு)

௩௬ கடிதோடும் வெண்டேரை நீரா மென் றெண்ணிப்
பிடியோ டொருங்கோடித் தாள்பிணங்கி வீழும்
வெடியோடும் வெங்கானஞ் சேர்வார்கொ னல்லாய்
தொடியோடி வீழத் துறந்து.

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.

(இ - ள்) விரைந்தோடும் பேய்த்தேரை நீரா மென்று கருதிக் களிறுகள் பிடியோடே கூட ஓடித் தாள்ஓய்ந்து பிணங்கிவீழும் பிளவோடிய வெங்கானத்தைச் சென்று நங்காதலர் சேர்வார்கொல்லோ? நல்லாய்! நங்கையிற் றொடி யோடிவீழத் துறந்து; எ-று. (சு)

௩௭ தோழியர் சூழத் துறைமுன்றி லாடுங்கால்
வீழ்பவள் போலத் தளருங்கா—சூழாது
கல்லத ரத்தத்தைக் காதலன் பின்போதல்
வல்லவோ மாதர் நடை.

உடன்போய தலைமகட்கு நற்றாய்
கவன்றுரைத்தது.

(இ - ள்) தோழியர் சுற்ற முற்றத்திற்றுறையின் விளையாடும்பொழுதும் வீழ்பவளேபோலத் தளருங் கால்கள் ஒய்ந்து தாழாதே கல்வழியையுடைய அத்தத்துத் தன் கொழுநன்பின் போதலைவல்லவோ? காதலையுடையாள் நடை எ-று. (எ)

௩அ சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்
பிணைமா னினிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தி னூச்சுஞ் சுரமென்பர் காதல
ருள்ளம் படர்ந்த நெறி.

பிரிவின்கண் ஆற்றளாயின தலைமகளைத்
தோழியாற்றுவித்தது.

(இ - ள்) சுனையின்கண் உள்ள சிறியநீரைப் பிணைக்கு உண்ண நிரம்பாது என்று எண்ணிப் பிணைமான் இனிதாக உண்ணவேண்டிக், கலையாகியமாத் தனது கள்ளத்தினானே பொய்யே உறுஞ்சும் சுரமென்று சொல்லுவர்; நங்காதலர் தம் அகத்தினாற் போயினநெறி எ-று. (அ)

௩௯ மடவைகா ணன்னெஞ்சே பாவ்பொருண்பாட் டோடப்
புடைபெயர் போழ்தத்து மாற்றாள்—படர்கூர்ந்து
விம்மி யுயிர்க்கும் விளங்கிழையா ளாற்றுமோ
நம்மிற் பிரிந்த விடத்து.

தலைமகன் பொருள்வலித்த நெஞ்சிற்குச்
சொல்லிச் செலவழுங்கியது.

(இ - ள்) அறியாய்காண், மிக்கநெஞ்சே! மாட்சிமைப்பட்ட பொருளின் மாட்டுச் சேறலான், முயங்கி நாம் புடைபெயருங்காலத்தும் ஆற்றமாட்டாளாய்த் துன்பமிக்கு விம்மி உயிராநின்ற விளங்கிழையாள் ஆற்றவல்லளோ? நம்மை நீங்கியவிடத்து எ-று. (௯)

௪௦ இன்றலர் வீர்ம்படையு ளீர்ங்கோதை தோடுணையா
நன்கு வதிந்தனை நன்னெஞ்சே நாளைநாங்
குன்றத ரத்த மிறந்து தமியமா
யென்கொலோ சேக்கு மிடர்.

இதுவுமது.

* இதனைக், "கூடலா... குளிர்ந்த சேக்கையுள் ஈர்ங்கோதைசயயு சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து இவ்... மிகவுந்தங்கினை; நன்னெஞ்சே! இவ் வடைப்பட்டாற் கூடுகை; ஒற்றைப்பட்டாற் மலைவழியேயிறந்து தமியேமாய் என நாச்சியார் திருமொழி உரையினும், (கூட (௰)
நினைத்தகன்றார் வருகென், றுழிதிருத்திச் சுழ
சிற்றம்பலக்கோவையினும் (௧அசு) "வளைத்துக்கிட
என அம்பிகாபதிகோவையினும் (௩உஉ) வருவனவற்று

# ரு.—நெய்தல்.

சக தெண்கடற் சேர்ப்பன் பிரியப் புலம்படைந்
தொண்டடங்கண் டுஞ்சற்க வொள்ளிழாய்—நண்படைந்த
சேவலுந் தன்னருகிற் சேக்குமா லென்கொலோ
பூந்தலை யன்றில் புலம்பு.

அல்ல குறிப்பட்ட தலைமகற்குச் சொல்லுவாளாய்த்
தோழி தலைமகட்குச் சொல்லியது.

(இ - ள்) தெண்கடற் சேர்ப்பன் பிரிதலாற் றனிமையையடைந்து நின்னுடைய ஒள்ளியகண் துயிலாதொழிக; ஒள்ளிய இழைகளையுடையாய்! நட்பினையடைந்த சேவலும் தன்னருகே உறையாநின்றதாதலான், என்னை கொல்லோ? செம்பூப்போலுஞ் சூட்டினையுடைய பெடையன்றில் புலம்புதல் எ-று. (க)

சஉ கொடுந்தா ளலவ குறையா மிரப்பே
மொடுங்கா வொலிகடற் சேர்ப்ப—னெடுந்தேர்
கடந்த வழியையெங் கண்ணாரக் காண
நடந்து சிதையாதி நீ.

காமமிக்க கழிபடர்கிளவி.

(இ - ள்) கோடியிருந்த தாளினையுடைய அலவனே! ஒரு காரியம் நின்னை யிரப்பேம்; ஒலியாநின்ற அடங்காத கடற்சேர்ப்பன் நெடுந்தேர் போயின வழியை எம்முடைய கண் நிரம்பக்காணும்வகை அதன்மேல் நடந்து அழியாதொழிவாயாக எ-று. (உ)

சரு *பொரிப்புறப் பல்லிச் சினையீன்ற புன்னை
வரிப்புற வார்பணன்மே லேறித்—தெ...
தாழ்கடற் றண்சேர்ப்பன் ற...
லாழியாற் காணுமோ ...கட்கு நற்றுய்
...னறுரைத்தது.

... முற்றத்திற்றுறையின் விளையாடும்பொழு

* இதனைப், "பிற... னளருங் கால்கள் ஒய்ந்து தாழாதே கல்வழி
நச்சினார்க்கினியர் ...த் தன் கொழுநன்பின் போதலைவல்லவோ? காதலை
ய ... எ-று. (எ)

(இ-ள்) பொரிந்த புறத்தையுடைய பல்லிமுட்டைபோல அரும்பினை யீன்ற புன்னைப்பூக்களையுடைய வரிப்பட்ட புறத்தினையுடைய உயர்ந்த மணற்குன்றின்மேல் ஏறியிருந்து, தெளிவுறத் தாழ்கடற் றண்சேர்ப்பனுடைய தார்அகலத்தை நமக்கு நல்குமாயிற், * கூடல் இழைப்பாற் காண்பேம் யாம் எ-று. (ங)

சச கொண்கன் பிரிந்த குளிர்பூம் பொழினோக்கி
புண்கண் சிவப்ப வழுதே னொளிமுகங்
கண்டன்னை யெவ்வம்யா தென்னக் கடல்வந்தென்
வண்டல் சிதைத்ததென் றேன்.

பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்து
மொழிகிளவியாற் றோழி தலைமகட்குச் சொல்லுவா
ளாய்ச் செறிப்பறிவுறீஇ வரைவுகடாயது.

(இ-ள்) நம்மை இற்செறிக்கையாற் கொண்கன் பிரிந்த குளிர்பூம்பொழிலை நோக்கி உண்கண் சிவப்ப அழுத என்னுடைய ஒளிமுகத்தைக்கண்டு அன்னை நினக்கு வந்த இடும்பை யாது என்னக் கடல்வந்து என்னுடைய விளையாட்டுச் சிற்றிலைச் சிதைத்தது என்று சொன்னேன்; எம்பெருமாட்டி! எ-று (ச)

சரு ஈர்ந்தண் பொழிலு ளிருங்கழித் தண்சேர்ப்பன்
சேர்ந்தென் செறிவளைத்தோள் பற்றித் தெளித்தமை
மாந்தளிர் மேனியாய் மன்ற விடுவனவோ
பூந்தண் பொழிலுட் குருகு.

தலைமகனைத் தோழி வரைவுகடாதற் பொருட்டுத்
தலைமகள் வரைவுவேட்டுச் சொல்லியது.

---

* இதனைக், "கூடலாவது வட்டமாகக் கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து இவ்விரண்டு சுழியாகக் கூட்டினால், இரட்டைப்பட்டாற் கூடுகை; ஒற்றைப்பட்டாற் கூடாமையென்று ஸங்கேதம்" என நாச்சியார் திருமொழி உரையினும், (கூடற்றிருப்பதிகம்) "மணற்குன்றினீத்தகன்றூர் வருகென், றூழிதிருத்திச் சுழிக்கணக்கோதி" எனத் திருச்சிற்றம்பலக்கோவையினும் (௧அ௬) "வளைத்துக்கிடந்த வரிமணற்கூடலும்" என அம்பிகாபதிகோவையினும் (௩உஉ) வருவனவற்றான் உணர்க.

(இ - ள்) குளிர்ந்த தண்பொழிலின்கண் இருந்து பெரிய கழியையுடைய தண்சேர்ப்பன் புணர்ந்து என் செறிவளைத்தோள்பற்றி என்னைத் தெளிவித்த வஞ்சினத்தை, மாந்தளிர்மேனியாய்! மெய்யாக மறந்துவிட வல்லவோ? அப்பூந்தண்பொழிலுள் வாழுங் குருகுகள் எ-று. (௫)

௪௬ ஓதந் தொகுத்த வொலிகடற் றண்முத்தம்
பேதை மடவார்தம் வண்டல் விளக்கயருங்
கானலஞ் சேர்ப்ப தகுவதோ வென்றோழி
தோணலந் தோற்பித்த னீ.

பகற்குறிவந்து புணர்ந்து நீங்குந் தலைமகனைக்
கண்ணுற்றுநின்று தோழி வரைவுகடாயது.

(இ - ள்) ஓதம் எறித்திரட்டிய ஒலிகடற் றண்முத்தங்களைப் பேதைமையுடைய மடவார் தம்வண்டற் சிறுமனைக்கு விளக்காக விருப்புச்செய்யும் கானலஞ் சேர்ப்பனே! நினக்குத் தகுவதொன்றோ? என்னுடைய தோழியுடைய தோள்களின் நலத்தை நீ தொலைவித்தல் எ-று. (௬)

௪௭ பெருங்கட லுள்கலங்க நுண்வலை வீசி
யொருங்குடன் றன்னையர் தந்த கொழுமீ
னுணங்கல்புள் ளோப்பு மொளியிழை மாத
ரணங்காகு மாற்ற வெமக்கு.

தோழிக்குத் தலைமகன் சொல்லியது.
தோழற்குச் சொல்லியதூஉமாம்.

(இ - ள்) பெரிய கடல் உள்ளெல்லாங் கலங்க நுண்ணிய வலைகளாலே வீசி ஒருங்குடனே தமையன்மார் கொண்டுவந்த கொழுத்த மீன் உணங்கல்களைக் கவரும் புட்களை ஓப்புகின்ற ஒளியிழைமாதர் மிகவும் எமக்கு வருத்துந் தெய்வமாம் எ-று. (௭)

௪௮ எக்க ரிடுமணன்மே லோதந் தரவந்த
நித்தில நின்றிமைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப
மிக்க மிகுபுகழ் தாங்குபவோ தற்சேர்ந்தா
ரொற்கங் கடைப்பிடியா தார்.

தலைமகனைத் தோழி வரைவுகடாயது.

(இ-ள்) திரைவந்து இட்ட இளமணன்மேல் ஓதம் தாவந்த முத்தங்கள் நின்று விளங்காநின்ற நீண்ட கழியினையுடைய தண்சேர்ப்பனே! உலகத்தின்கண் விளங்கிய மிகுபுகழைத் தாங்கவல்லரோ? தம்மைச் சேர்ந்தாருடைய தளர்ச்சியைக் கடைப்பிடித்துத் தீராதார் எ-று. (அ)

சகூ * கொடுமுண் மடற்றாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ
விடையு ளிழுதொப்பத் தோன்றிப்—புடையெலாந்
தெய்வங் கமழுந் தெளிகடற் றண்சேர்ப்பன்
செய்தான் றெளியாக் குறி.

அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்தமை அறியத் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

(இ-ள்) கொடிய முள்ளையுடைய மடற்றாழையினது மொட்டவிழ்ந்த ஒள்ளிய பூக்கள் நடுவுள்ள சோற்றுன் வெண்ணெய்போலத் தோன்றி மருங்கெல்லாம் தெய்வமணம்போலக் கமழாநின்ற தெளிந்த கடற்றண்சேர்ப்பன் நம்மாற் றெளிக்கப்படாத குறியைச் செய்தான்; ஆதலால் அல்ல குறிப்பட்டேம் எ-று. (கூ)

ரு0 ‡ அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமாப் பூண்ட
மணியரவ மென்றெழுந்து போந்தேன்—கனிவிரும்பும்
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழாய்
உள்ளுருகு நெஞ்சினே னாய்.

இதுவுமது.

(இ-ள்) நிலத்தைச் சூழ்ந்த கடற்றண்சேர்ப்பன் தேர்பூண்ட பரிமா அணிந்த மணியரவம் என்று கருதிச் சென்றேன்; கனிகளை விரும்புகின்ற புள்ளரவங்களைக் கேட்டு மணியரவம் அன்று என்று போந்தேன்; ஒளியிழாய்! உள்ளுருகும் நெஞ்சினேனாகி எ-று. (ரு0)

நெய்தல் முடிந்தது.

ஐந்திணையைம்பது முற்றிற்று.

---

* இது "பாங்கி தலைமகன் தீங்கெடுத்தியம்பியது" எனக் கொள்வர் அகப்பொருள் விளக்க உரைகாரர். (களவியல், சச.)

‡ இஃது "தான் குறிமருண்டமை தலைவி பாங்கிக்கு உணர்த்தியது" எனக்கொள்வர் அகப்பொருள் விளக்க உரைகாரர் (ஷை ஷை.)

# ஐந்திணையைம்பது.

## செய்யுண் முதற்குறிப்பு அகராதி.

---


அணிகடற்றண் - ௫௦
அணிநிறமஞ்ஞை - ௨
அழலவிழ்தாமரை - ௨௫
இன்றல்கலீர்ம் - ௪௦
ஈர்ந்தண்பொழி - ௪௫
உதிரந்துவரிய - ௩௧
உள்ளார்கொல் - ௪
எக்கரிடமணன் - ௪௮
எறிந்தெமர்தாழு - ௧௮
ஒல்லென்றொலிக் - ௨௮
ஒல்லென்ஞெலிபு - ௨௯
ஓதந்தொகுத்த - ௪௬
கடிதோடுவெண் - ௩௬
கானகநாடன் - ௧௩.
குளிரும்பருவத்தே - ௩௦
கொடுந்தாளலவ - ௪௨
கொடுமுண்மடற் - ௪௯
கொடுவரிவேங்கை - ௧௬
கொடுவிலெயினர் - ௩௫
கொண்கன்பிரிந்த - ௪௪
கொண்டுழிப்பண் - ௨௧
கோடுயர்தோற்ற - ௫
கோட்டமைவில்விற் - ௩௪
கோலச்சிறுகுரு - ௨௪
கூன்வாய்ச்சிறு - ௩௮
தண்வயலூரற் - ௨௭
தெண்கடற்சேர்ப்பன் - ௪௧
தேரோன்மலை - ௭
தோழியர்சூழத் - ௩௭
நானவின்றபாக - ௧௦
நெடுமலைநன்றாட - ௧௯
பாலையும்பந்தும் - ௩௩.
பிரிந்தவர்மேனி - ௮
புனைபூந்தழையல் - ௧௪
பெய்வளைக்கையாய் - ௨௬
பெருங்கடலுள்கலங் - ௪௭
பொரிப்புறப்பல்லி - ௪௩
பொன்னிணர்வேங்கை - ௧௧
போதார்வண்டூதும் - ௨௨
மஞ்சிவர்சோலை - ௧௭
மடவைகாணன் - ௩௯
மல்லர்க்கடந்தான் - ௧
மால்வரைவெற்ப - ௧௨
மின்னுமுழக்கு - ௩
முல்லைநறுமலர் - ௬
யாணரகல்வய - ௨௩
வருவர்வயங்கிழாய் - ௯
விலங்கல்விளங்கி - ௩௨
வெறிகமழ்வெற்ப - ௨௦
வேங்கைநறுமலர் - ௧௫

# அரும்பத அகராதி.

[எண்கள் பாட்டெண்கள்.]

அகவல் - அழைத்தல், உ.
[illegible]தல் - [illegible]ருந்துதல், ஙஉ.
[illegible]ங்கிற்று - வருத்திற்று, உ0.
[illegible]ங்கு - தெய்வம், உ0, வருத்துந்
அணி - அழகு, உ. [தெய்வம், சஎ.
அதர் - வழி, சகூ, உ0.
அத்தம் - கடறு, ஙச. வழி, ஙஎ.
அமர்தல் - விரும்புதல், க. போலுத
அமை - மூங்கில், ஙச. [ல், கங.
அயர்தல் - கலங்குதல், உஉ.
அலம்வருதல் - வருந்தாநிற்றல், உ0.
அல்கல் - இரவு, ச0.
அறல் - அறன்மணல், உஎ.
அன்னோ - அந்தோ, உ0.
ஆடுதல் - விளையாடுதல், ஙஎ.
ஆர - நிரம்ப, சஉ.
ஆமான் - அரிய ஆனிரை, எ.
ஆரிருள் - கங்குல், ககூ.
ஆர்தல் - நிகருதல், உஉ.
ஆழி - கடலிழைப்பு, சங.
இணர் - பூங்கொத்து, கச.
இயம்புதல் - ஒலித்தல், உரு.
இரங்குதல் - முழங்குதல், உ.
இரிந்து - பிரிந்து, சகூ.
இருமை - பெருமை, ரு.
இல் - மனை, உஉ.
[illegible] - படர்தல், கஎ.
[illegible]ய், சகூ.
[illegible]தல், உ0.
குளிர்ந்த சேக்கை, ச0.
உடன்று - மாறுபட்டு, கூ.
உணர்சம் - அறிவாம், ச0.
உறை - முழங்கி, சா.
உருவொடுங்குதல் - மேனி மெலியா
[நிற்றல், கஎ.
உவத்தல் - விரும்புதல், எ.
உள்ளுதல் - நினைத்தல், ககூ.
உறைக்கும் - பெய்கின்ற, ரு.

ஊக்குதல் - உறுஞ்சுதல், ஙஅ.
எக்கரிடுமணல் - திரைவந்திட்ட இள
[மணல், சஅ.
எஞ்சாமை - ஒழியாமை, கஎ.
எதிரி - எதிர்த்து, ங0.
எதிருதல் - தம்முட்டலைப்படுதல்,
எயினர் - வேட்டுவர், ஙரு. [ஙக.
எய்தாது - நிரம்பாது, ஙஅ.
எவ்வம் - இடும்பை, சசா.
எழில் - அழகு, க0.
ஏக்கற்று - விரும்பி, உஅ.
ஏயினர் - எதிர்ப்பட்டோர், கச.
ஏனல் - பசுந்தினை, கஉ.
ஐங்கூந்தல் - ஐவகைப்பட்ட கூந்தல்,
ஒடுங்குதல் - அடங்குதல், சஉ. [உஎ.
ஒதுங்குதல் - மெல்லநடத்தல், ககூ.
ஒற்கம் - தளர்ச்சி, சஅ.
ஒன்றூனும் யாதானும், உச.
கடத்தல் - வெல்லுதல், க.
கடம்பு கடப்பந்தார், க.
கடிது - விரைந்து, ஙகூ.
கண்படுத்தல் - துயிலுதல், ஙரு.
கலி - மிக்க, உ.
கல்லதர் - கல்வழி, கூஎ.
கவினுறுதல் - அழகுபெறுதல், சச.
கலுழும் - கலுழுகின்ற, சஉ.
காண்டொறும் - காணுந்தோறும், உ,
காய்ந்து - சினந்து, ஙங. [ஙச.
காரம் - புண்ணிற்கிடுங்காரம், உசா.
கார் - கார்காலம், உ. முகில், ஙச.
கானம் - காடு, ஙரு.
கான் - காடு, க0.
குரல் - கதிர், சஉ.
குறை - காரியம், சாஉ.
குன்றதாத்தம் - மலைவழி, ச0.
கூம்பு - மொட்டு, சகூ.
கூர்தல் - மிகுதல், சா.
கேண்மை - நட்புநெறி, உங.

கொடுந்தாள்-கோடியிருந்ததாள், சஉ.
கொடுவில் - கோட்டியவில், ௩௫.
கொண்மூ - முகில்கள், ௫.
கொல்லாங்கு - சிதைப்பதுபோல, ச.
கோடு - குவடு, ௫.
கோலம் - அழகு, உ௪.
சந்தனச்சாந்து - சந்தனக்குழம்பு, உ௪.
சார்தல் - புணர்தல், உ௪.
சாலுதல் - அமைதல், எ.
சால் - நிரம்ப, ௩.
சிதையாதி - அழியாதொழிவாயாக, [சஉ.
சினை - முட்டை, ௪௩.
சுரம் - கடறு, ௩௫.
சூழ்தல் - சுற்றுதல், ௩௭.
சென்றீக - செல்வதாக, ௪௦.
சேக்குதல் - தங்குதல், ௪௦, ௪௪.
சேத்தல் - சிவத்தல், ௪௫.
தடி - தசை, ௩௫.
தலைபிணக்குதல் - ஒன்றோடொன்
[றுபிணக்குதல், ௬.
தன்னைமார் - தமையன்மார், ௬௭.
தருதல் - கொண்டுவருதல், ௩௭.
தாழ்தல் - படிதல், உ.
தாள்பிணக்கி - தாளோய்ந்து, ௩௩.
தாள்வீழ்த்தல் - தாள்செறித்தல், ௪௦.
திரிதல் - உழலுதல், உஉ.
திஞ்சுதல் - துயிலுதல், ௬௬.
துறைமுன்றில் [முன்றில் துறை] -
முற்றத்திற்றுறை, ௩௭.
தெரிதல் - ஆராய்தல், ௬.
தெரிப்புற - தெளிவுற, ௪௩.
தெறூஉம் - சுடுகின்ற, ௩௩.
தென்றல்வளி - தென்றற்காற்று, ௩௪.
தேரோன் - தேரினையுடையபகல
தேற - தெளிய, உ௪. [வன், ௫.
தொகுத்தல் - திரட்டுதல், ௪௬.
தோற்பித்தல் - தொலைவித்தல், ௪௬.
நகையாகின்று - நகையாகாநின்றது,
நடுகல் - போரின்கண் இறந்தார் [உ௫
[பெயர்பொறித்துநட்டகல், ௩௫.
நவிலுதல் - பயிலுதல், ௪௦.
நன்கு - மிகவும், ௪௦.
நன்னெஞ்சு - மிக்கநெஞ்சு, ௩௩.
நாணம் - நறுவிரைகள், ௬௩.
நித்திலம் - முத்தங்கள், ௪௮.
நிரந்து - நிவடந்து, ௫.

நீத்தல் - துறத்தல், ௩௪.
நீர்மை - தன்மை, ௪.
நீலம் - நீலமலர், உ௪.
நுணங்குதல் - நுணுகுதல்,
நெறி - வழி, உஉ.
நோவிதா - கடிதாக, ௪௦
படர்கூர்தல் - துன்பமிகு
படர்தல் - போதல், ௩௮.
பணிமொழி - மெல்லியமொ
[ழி,
பரிதல் - காதலித்த, உ௩.
பருவம் - காலம்,
பிரியா - இடையறுத,
புடை - மருங்கு, ௪௬.
புரிதல் - விரும்புதல், ௩௫.
புலத்தல் - ஊடுதல், உஎ.
புலம்படைதல் - தனிமையடைத
புல்லுதல் - முயங்குதல், உ௬. [ல், ௪௪.
புல்லெனல் - பறகென்றல், அ.
புறவு - காடு, ௪உ.
புனைதல் - செய்தல், ௪௪.
பூந்தலை அன்றில் - செம்பூப்போலுஞ்
[சூட்டினையுடைய அன்றில், ௪௪.
பொருநிளர் - துணைவர், அ.
பொற்ப - பொலிவுதோன்றும்வகை,
போதல் - கழிதல், ௧௧. [அ.
போது - மலர், உஉ.
மஞ்சு - முகில், ௧எ.
மஞ்ஞை - மயில், உ.
மடவைகாண் - அறியாய்காண், ௩௬.
மணி - நீலமணி, உ.
மயங்குதல் - மிடைதல், ௧. அறிவு
[கெடுதல், ௪௩.
மறவல் - [illegible]
மறை - [illegible]
மன்ற - [illegible]
மாண - [illegible]
மாதர் - [illegible]
மாந்தல் - [illegible]
மால் - பெருமை, [illegible]
மேலொய் - [illegible]
யாணர் - [illegible]
யாய் - அன்னை, உ௦.
வணங்குதல் - வளைதல், ௪உ.
வணடல் - விளையாட்டிற்சிற்
வண்ணம் - நிறம், உ௭.

உ

கடவுள் துணை.

# நான்மணிக்கடிகை.

## மூலமும் உரையும்

“செந்தமிழ்”ப்பிரசுரம்—கரு.

இரண்டாம் பதிப்பு.

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலை

1911.

விலை அணா-௩-ப

ஸ்ரீ

கடவுள்துணை.

விளம்பிநாகனார்

அருளிச்செய்த

# நான்மணிக்கடிகை

## மூலமும் உரையும்.

க மதிமன்னு மாயவன் வாண்முக மொக்குங்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கு
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளி
னெதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரொக்கு நிறம்.

இதன்பொருள்; மதி மாயவனது ஒளிமுகம்ஒக்கும்; ஒளிசிறந்த ஞாயிறு அவனது சக்கரமொக்கும்; முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்கட் செவ்விமலரை மற்றவன் கண்ணொக்கும்; நிறம் காயாவின் புதுமலரை ஒக்கும்; என்றவாறு.

உ படியை *மடியகத் திட்டா னடியினான்
முக்காற் கடந்தான் முழுநிலம்—மக்காலத்
தாப்பனித்† தாங்கிய குன்றெடுத்தான் சோவி
னருமை யழித்த மகன்.

இ-ள்; உலகத்தைத் தன்வயிற்றின்கண் வைத்தானும், எல்லாவுலகையும் தன்சேவடியான் மும்முறையாற் கடந்தானும், முற்காலத்து ஆநி

* 'மடியகத் திட்டான் மகவை' என்றுங் களத்திறமுரைத்தகாதைக் கண், மடி-வயிறென்பதற்கு இதனையே எடுத்துக்காட்டினர் அடியார்க்குநல் லார்.

† 'தாநிரை' எனவும் பாடம்.

ரையைத் துயர்கெடுக்கவேண்டி மலையையெடுத்தானும், சோவென்னும் *குறும்பினருமையை அழித்தமகனும் முன்சொல்லிய மாயவன்; எ-று.

இவையிரண்டும் கடவுள் வாழ்த்து.

---

## நூல்.

௩ எள்ளற்க வென்று மெளியரென் றென்பெறினுங்
கொள்ளற்க கொள்ளார்கை †மேற்பட—வுள்சுடினுஞ்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

இ-ள்; எளியரென்று ஒருவரையும் என்றும் இகழாதொழிக; எல்லாம்பெறினும் தான்சென்று கொள்ளத்தகாதார் கை மேற்படக் கொள்ளாதொழிக; சிற்றிற்பிறந்தார் செய்த பிழை தன்னுள்ளத்தைச் சுடுகின்றதாயினும் அவரை வெகுளாதொழிக; தனக்குத் தகுதியில்லாத சொற்களை ஆராயாது விரைந்து கூறுதொழிக; எ-று. (௧)

கொள்ளாரென்றது பகைவரென்றுமாம்.

௪ பறைபட வாழா வசுணமா வுள்ளங்
குறைபட வாழா ‡ருரவோர்—நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்
சொற்பட்டாற் சாவதாஞ் சால்பு.

இ-ள்; பறையொலித்தால் உயிர்வாழா அசுணமா¶; மனங்குறைபட உயிர் வாழார் அறிவுடையார்; மிக்க காட்டின்கண் உள்ள மூங்கில்கள் நெற்பட்டபொழுதே சாம்; அவைபோல, ஒருவன் தனக்குத் தகாத பழிச் சொற்கள் படவரிற் சாவது சால்பாவது; எ-று. (உ)

---

*குறும்பு - அரண். சோவரணம் - அசுரர் நகரம்: என்ப.
† 'மேல்வர'
‡ 'உரவோ ரெனினு மடவோ ரெனினும்' என்றார் பதிற்றுப்பத்தினும் (அ-௩). உரம்-அறிவு'உரமொருவர்க்குள்ள வெறுக்கை' என்னுந் திருக்குறளானுணர்க.

¶ அசுணம்-இசையறிவதோர் விலங்கு.(சிந்தாமணியுரை-பதுமை-உ௩௭) ஒருவன் முதற்கண் யாழிசையைக்கேட்பித்து, இஃது அவ்விசையின்பத்தேயின்புற்று மூழ்கியவாவில் வலியதோர் பறையை ஒலிக்க, அதன் வல்

௫ மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்
தேறிய பின்னறிப மாநல மாசறச்
சுட்டறிப பொன்னி னலங்காண்பார் *கெட்டறிப
கேளிரா னாய பயன்.

இ-ள் ; மணியினது நன்மையைக் கழுவி அறிவர்; பண்ணினையமைத்து ஏறியபின்னர் அறிவர் மாவினது நன்மையை ; குற்றம் அறுபடச் சுட்டறிவர் பொன்னினன்மையைக்காண்பார் : அதுபோலத் தாங்கள் கெட்டால் அறிவர் கேளிரானாய பயன் ; எ-று. (௫)

௬ கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றி
னொள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுட்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
†நல்லாள் பிறக்குங் குடி.

இ-ள்; கள்ளியின் வயிற்றின் அகில் தோன்றும் ; மானின் வயிற்றின் ஒள்ளிய அரிதாரம் தோன்றும் ; பெருங்கடலுட் பலபொருள்களையும் விலை

லோசையைக் கேட்கலாற்ருது இவ்விலங்கி னரியவுயிர் விட்டு நீங்கும் என்ப. இதனை 'மறையிற்றன் யாழ்கேட்ட மானை யருளா, தறைகொன்று மற்றத னுருயி ரெஞ்சப், பறையறைந் தாங்கு'என்னும் நெய்த்ற்கலியானும், (உ௬) அதற்கு நச்சினார்க்கினியர் 'வஞ்சனையாலே தான் வாசித்த யாழிசையைக்கேட்ட அசுணமாவை இவ்வின்பமுற்றதென்று அருள்பண்ணாதே, முன்புசெய்த வஞ்சனையைக் கெடுத்துப் பின்னை அதனரிய உயிர் போம்படி பறையைத்தட்டினாற்போல' எனக்கூறிய உரையானும் அறிக. 'யாழ்நறையடுத்தவசுணநன்மாச்செவிபறையடுத்ததுபோலும்' (இராமாவதாரம்-அவையடக்கம்)என்பதூஉம் இதுபற்றிவந்தது.'இருஞ்சிறைத்தொழுதியார்ப்ப யாழ்செத், தீங்கல் விடரளை யசுண மோர்க்கும்' என்று அகப்பாட்டினும்(அஅ) வருதல் காண்க. 'அசுணங் கொல்பவர் கைபோ னன்று, மின்பமுந் துன்பமுமுடைத்தே' என்பது நற்றிணை (௩0௪)இன்பம் யாழிசைத்தலாலும் துன்பம் பறையொலிப்பித்தலாலுங் கொள்க. "அச்சப்பொருளாவன 'வள்ளெயிற்றரிமா வாள்வரி வேங்கை, முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ, யீற்ருமகண்மா வேக பாதந், கூற்றங் கோண்மா குன்றுறை யசுணம்' என்றுசொல்லப்பட்டாற் போல்வன" என மெய்ப்பாட்டியலுரையிற் (௪) காணப்படுதலால் இது நீங்கிழைக்கும் வலியுடையதென்றும், அதுபற்றி அஞ்சத்தக்கதென்றும்,மலையின்கண் உறைவதென்றும் விளங்கிக்கொள்க. பிங்கலநூலார் இவ்வசுணத்தை 'அசுணமா விசையறி பறவை கேகயப்புள்' என்பதனாற் பறவையெனக் கூறுகின்றார். 'மறையிற்றன் யாழ்கேட்ட மானை' என வழங்கிய சான்றோர்க்கு இதனைப் புள் எனல் கருத்தில்லைப் போலும்!

* 'கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை, நீட்டியளப்பதோர் கோல்' என்னுந் திருக்குறளை நோக்குக.

†'நல்லாளிலாதகுடி' என்னுந் திருக்குறளுரையையும்(௧0௩0)நோக்குக.

யாகப்பெறும் முத்தங்கள் தோன்றும்; அவைபோல, அறிவார்யார் நல்லறிவினை யுடையாஞெருமகன் பிறக்குங் குடியினை? எ-று. (௪)

எ கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மத—மெல்லெ
னருளிற் பிறக்கு மறநெறி* யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்†.

இ-ள்; மலையின்கட்பிறக்கும் ஒளியையுடைய மணி; மகளிரது மெல்லிய சொல்லின்கட் பிறக்கும் தன் மனத்தின்கட் களிப்பு; மெல்லென்ற அருளின்கட் பிறக்கும் நல்ல அறநெறிகள்; அவ்வற முதலாயின எல்லாம் பொருளின்கட் பிறக்கும்; எ-று. (எ)

அ திருவொக்குந் தீதி லொழுக்கம் பெரிய
வறஞெக்கு மாற்றி ஞெழுகல்—பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றுதார் முன்னர்ச் செலவு.

இ-ள்; தான் பிறந்த குலத்திற்குத் தீதுவாராமல் ஒழுகுமொழுக்கம் செல்வத்தோடொக்கும்; மிக்க அறஞ்செய்கையோடு ஒக்கும் நெறியின்கணின்று ஒழுகுமொழுக்கம்; பிறஞெருவனைத் தனக்கு நட்பாகக்கொண்டுவைத்துப் பின்பு அவன்மாட்டுக் கண்மாறுதல் அவனைக்கொன்றதனோடு ஒக்கும்; தன்னை விரும்பாதார் மாட்டு அவராலாகும் பயன்கருதிச் சேறல் புலையோடு ஒக்கும்; எ-று. (அ)

கூ கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை யொண்பொருள்
‡செய்வமென் பார்க்குந் துயிலில்லை யப்பொருள்
காப்பார்க்கு மில்லைத் துயில்.

இ-ள்; களவுகாணுதும் என்று சோர்வு பார்ப்பார்க்குந் துயிலில்லை; தன்ஞற் காதலிக்கப்பட்டாளொருத்திமாட்டுத் தம்முள்ளம்வைப்பார்க்கும் அவளைக்கூடுமெட்டுந் துயிலில்லை; ஒள்ளிய பொருளைத் தேடுவமென்பார்க்

---

* 'அறனுமருளுடையான் கண்ணதே யாகும்' என்பது சிறுபஞ்சமூலம்.

† 'பொருளானு மெல்லாம்' என்பது திருக்குறள்-௯௦௦௨.

‡ 'சேர்ப்பாமென்'

கும் அப்பொருள் கூடுமளவுந் துயிலில்லை; அக்கூடிய பொருளைப் பிறர் கொள்ளாமற் காப்பார்க்குந் துயிலில்லை; எ-று. (எ)

கo கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்றா வுறுமுத—றெற்றென
வல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றா கெடும்.

இ-ள்; கற்றார்மாட்டுக் கழிந்தபொருட்கு இரக்கந்*தோன்றா; அன்பு பட்ட பொருளைப் பெறுவதற்கு முயல்வார் மாட்டு அவ்வன்பு பட்டன தமக்கெய்தாமைக் காரணந் தோன்றா; தெளியப்பாவ முள்ளவாம் வினைகளைப்பயின்று பழகிவந்தார்க்கு அறவினை தோன்றா; வெகுண்டார்க்கு எல்லா நன்மைகளுந் தோன்றா; எ-று.

உறுமுத லென்பதனை 'உறுமது' என்றும், 'உசாவுதல்' என்றும் பாடம் ஓதுவாருமுளர். (அ)

கக நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்புங்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணி
தான்செல் லுலகத் தறம்.

இ-ள்; நிலத்துக்கு அழகென்று சொல்லுவர் நெல்லையும் கரும்பையும்; குளத்துக்கு அழகென்று சொல்லுவர் தாமரைப்பூவை; அவைபோல, பெண்டிரழகிற்கு அழகாவது நாணுடைமை; ஒருவன் தனக்கழகாவது தான்செல்லும் உலகிற்குத் துணையாகச் செய்யப்பட்ட அறம்; எ-று. (கூ)

கஉ கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத்தி னாற்பிணிப்பர் மாநாகங்—கொந்தி†
யிரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

இ-ள்; தறியினிற் பிணிப்படுப்பர் யானையை; சினந்தணியும் வகை ‡மறை மொழியிற் பிணிப்படுப்பர் மாநாகத்தை; அவைபோல, கழறித்

* 'இரங்கல் கழிந்தபொருட்டு மாகும்' என்பது தொல்காப்பியம் (உரி கக).

† கொந்துதல்-எரிதல்: 'கொந்தழல்' என்ப (சிந்-கேம-அஅ): ஈண்டுச் சுடச்சொல்லுதலின் மேற்று.

‡ 'மறைமொழி தானே மந்திர மென்ப' என்பது தொல்காப்பியம் (செய்-கஎகூ.)

தளை முதலாயினவற்றாற் பிணிப்படுப்பர் கீழ்மக்களை; இதத்தாற் பிணிப் படுக்க சான்றோரை; எ-று. (௧௦)

௧௩ நன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டு—மென்றும்
விடல்வேண்டுந் தன்கண் வெகுளி யடல்வேண்டு
மாக்கஞ் சிதைக்கும் வினை.

இ-ள்; பிறர் *அஞ்சத்தக்கவற்றின்கட் ‡டளம்பாதொழியவேண்டும்; தனக்குப் பிறர்செய்த நன்றியை மிகமனத்தின்கட் கொள்ளவேண்டும்; எஞ்ஞான்றுந் தன்மாட்டு வெகுளியை நீக்கவேண்டும்; தன் செல்வத்தைக்கேடு செய்யுஞ் செய்கையைக் கெடுக்கவேண்டும்; எ-று. (௧௧)

௧௪ பல்லினா னேய்செய்யும் பாம்பெல்லாங் கொல்களிறு
கோட்டானேய் செய்யுங் குறித்தாரை யூடி
முகத்தானேய் செய்வர் மகளிர் முனிவர்
தவத்திற் றருக்குவர் நோய்.

இ-ள்; பல்லானே பிறரைத் துன்பஞ்செய்யும் பாம்பெல்லாம்; கொல்களிறு தான்கொலைகுறித்தாரைக் கோட்டானே துன்பஞ்செய்யும்; மகளிர் தங்காதலரைப் புலந்து முகத்தானே துன்பஞ் செய்வர்; அவைபோல, அருந்தவரும் தமது தவத்தானே தம்மையிகழ்ந்தார்க்குத் துன்பத்தை மிகுவிப்பர் §; எ-று. (௧௨)

௧௫ பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரிற்—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரிற்
றீர்தலிற் றீப்புகுத னன்று.

இ-ள்; வீக்குதலமையாத யாழோசையிற் பறையோசை நன்று; பெருமையில்லாத ஆடவரின் நிறையுடைமையினின்ற பெண்ணே நன்று; ஒழுக்

* கடி-அச்சம்.

‡ தளம்புதல் - மானம் ஆழ்தல்.

§ தருக்கும் செருக்கும் மிகுதியையுங் குறித்துவரும்; "மிகுதியான் மிக்கவை செய்தாரை" (திருக்குறள்-௧௫௮), 'கவறுங் கழகமுங் கையுந் தருக்கி' (ஷை-௯௩௫) 'மிகுதியிறுவாய செல்வங்கள்' (நான்மணி-௧௧) என்பவற்றானுமுணர்க.

கமழிந்தண்டலிற் பசித்தலேநன்று; அன்புபட்டாரினீங்குதலிற் றீயின்கட் புகுதலேநன்று; எ-று. (கரு)

கசு வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழா
மின்சொற் குழியி னினிதெழூஉம் வன்சொல்
கரவெழூஉங் கண்ணில் குழியி னிரவெழூஉ
மின்மைக் குழியின் விரைந்து.

இ-ள்; செல்வப்பாத்தியுள்ளே தோன்றி வளரும் ஈகை; இன்சொற் பாத்தியுள்ளே இடையூறின்றியே தோன்றிவளரும் தன்சுற்றக்குழாம்; கண்ணோட்ட மில்லாத பாத்தியுட் கடுஞ்சொல்லும் கரத்தலும் தோன்றிவளரும்; வறுமைப்பாத்தியுட் டோன்றிவளரும் இரப்பு; எ-று. (கசு)

கஎ இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

இ-ள்; ஒருவன் தனக்குப் பொல்லாப்பு வேண்டின் இரப்பினைத் தொடங்குக; இவ்வுலகின்கண் என்றும் உளனாகவேண்டிற் புகழை நிறுத்துக; தன்னொடு மறுமைக்குத் துணையாகச் செல்வதனை வேண்டினானாயின் அறத்தைச் செய்க; வென்றியை வேண்டினானாயின் வெகுளியைத் தவிர்க; எ-று.

கஅ கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமி
றவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்.

இ-ள்; கடலினாழத்தை ஊடறுத்துச்செல்வர் நாவாயினை யுடையார்; சேனையினருமையை வென்றுசெல்லும் ப்ாய்மாவினையுடையவன்; குற்றமில்லாத தவத்தினருமையைத் தன்மனத்தினைத் தனக்கெனவுடையான் நீந்திக்கடக்கும்; அவையினதருமையைக் கற்றுவல்லவன் வென்றுவிடும்; எ-று. (கஅ)

கக பொய்த்த லிறுவாய நட்புக்கண் மெய்த்தாக
மூத்த லிறுவாய்த் திளநலந்—தூக்கின்
மிகுதி யிறுவாய செல்வங்க டத்தந்
தகுதி யிறுவாய்த் துயிர்.

இ-ள்; வஞ்சித்தலை ஈறாகவுடையவாயிருக்கும் நட்புக்கள்; மெய்ம்மையாக மூத்தலைத் தனக்கிறுவாயாக வுடைத்து இளமை நலம்; ஆராய்தலையில்லாத செருக்கினை இறுவாயாக வுடையவா யிருக்கும் செல்வங்கள்; தம்முடைய ஒழுக்கங்களை இறுவாயாகவுடையது உயிர் வாழ்வு; எ-று. (கஎ)

உ0 *மனைக்காக்க மாண்ட மகளி ரொருவன்
வினைக்காக்கஞ் செவ்விய னாதல்—சினச்செவ்வே
னாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல் கேட்டாக்கங்
கேளி ரொரீஇ விடல்.

இ-ள்; ஒருவனது மனைக்குச் செல்வமாவது மாட்சிமையுடைய மகளிருளராதல்; ஒருவனது காரியத்துக்கு ஆக்கமாவது செப்பமுடையவனாதல்; நாட்டுக்கு ஆக்கமாவது அந்நாட்டை ஆளுஞ் சினச்செவ்வேலையுடைய வேந்தன் நல்லனென்று பிறரால் சொல்லப்படுதல்; ஒருவன் கேட்டுக்கு ஆக்கமாவது தன் சுற்றத்தாரை மேவாது நீங்கிவிடுதல்; எ-று. (கஅ)

உக *பெற்றா னதிர்ப்பிற் பிணையன்னா டானதிர்க்குங்
கற்றா னதிர்ப்பிற் பொருளதிர்க்கும்—பற்றிய
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும் பண்ணதிர்ப்பிற்
பாட லதிர்ந்து விடும்.

இ-ள்; தன் கொழுநன் ஒழுக்கத்திற் கலங்கினனாயின் அவன் மனையாளும் அவன் வழியினளாகலான் அவளுங் கலங்கும்; கற்றான் கலங்குமாயின் அவன் கற்ற நூலுங்கலங்கும்; தன்னான் ஆளப்படுகின்ற நாடு நெறியில்லாது கலங்குமாயின் அரசன் செங்கோலுங் கலங்கும்; யாழின்கண் வீக்கங் கலங்குமாயிற் பாடலுங் கலங்கும்; எ-று. (க௯)

உஉ மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
வவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

இ-ள்; தன்மனைக்குப் பாழாவது மனையாளை இல்லாமை; தான்செல்லக்கடவ திசைக்குப் பாழாவது தன்னொடு நட்புடையாரை இல்லாமை; தானிருந்த அவைக்குப் பாழாவது அறிவான் முதிர்ந்தாரை இல்லாமை; தனக்குப்பாழாவது கற்றுணர்வில்லாத வுடம்பு; எ-று. (உ0)

* பெற்றான்-கொழுநன்: "பெற்றாற்பிழையாத பெண்டிரும்" என்றார் 'மாநிலந் தோன்றாமை' என்னும் பரிபாடலினும்.

உ௩ மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்குங்
கூடார்கட் கூடி விடின்.

இ-ள்; பெருமையை அழிக்கும் ஒற்றுமையின்மை; ஒருவனைத் தன் பொன்போலு மேனியைத் தானுரைக்கும்பொய் கெடுக்கும்*; பாலினது சுவையைப் பால்பெய்த பொல்லாக்கலங் கெடுக்கும்; தான்பிறந்த குலத்தைக் கெடுக்கும் தனக்கினமல்லாதாரை இனமாகக் கூடின்; எ-று. (உ௩)

உ௪ புகழ்செய்யும் பொய்யா விளக்க† மிகழ்ந்தொருவன்
பேணாமை செய்வது பேதைமை—காணாக்
குருடாச் செய்வது மம்ம ரிருடீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு.

இ-ள்; ஒருவன் பொய்சொல்லாமை யென்னும் விளக்கம் அவற்குப் புகழை விளக்கும்; ‡யாதனையு மிகழ்ந்து பாதுகாவாமையைச் செய்வது ஒருவன தறியாமை; யாதொன்றனையும் உண்மைகாணாக் குருடராய்ச் செய்வது கல்லாமை; மயக்கந் தீர்ந்த கண்ணுடையாராகச் செய்வது கல்வி; எ-று.(உ௪)

உ௫ மலைப்பினும் வாரணந் தாங்குங் குழவி
யலைப்பினு மன்னேயென் றோடுஞ்§—சிலைப்பினு
நட்டார் நடுங்கும் வினைசெய்யா ரொட்டா
ருடனுறையுங் காலமு மில்.

இ-ள்; மேல்வலிதாகிய பகைவந்து தன்னைமலைப்பினும் யானை போரைத்தாங்கும; குழவியைத் தாயலைப்பினும் அக்குழவி அன்னேயென்று

* பொய்த்தபிற் றன்னெஞ்சே தன்னைச்சுடுமாதலால் இவ்வாறு கூறினார்.

† 'பொய்யாமை யன்ன புகழில்லை' 'பொய்யா விளக்கே விளக்கு'எனத் திருக்குறளிற் கூறியவாறு காண்க.

‡ 'யாதொன்றும் பேணாமை பேதை தொழில்' என்ப. (திருக்குறள்-அ௩௩.)

§ 'தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட், டன்னா யென்னுங் குழவி' என்றார் குறுந்தொகையினும் (௩௯௭).

அவள்பின்னே செல்லும்; நட்டாரோடு நட்டார் வெகுண்டு வினைசெய்வாராயினும் அவர் நடுங்கும் வினை செய்யார்; பொருந்தாதார் ஒருவகையாற் பொருந்தினாராயினும் மனத்தாற் பொருந்தி யுடனுறையுங் காலமுமில்லை; எ-று. மேற்கொண்டவன் மலைப்பினும் என்றுமாம். (உரு)

உசு நகைநல நட்டார்க ணந்துஞ் சிறந்த
வவைநல மன்பின் விளங்கும்*—விசைமாண்ட
தேர்நலன் பாகனாற் பாடெய்து மூர்நல
னுள்ளானா னுள்ளப் படும்.

இ-ள்; நகையினது நன்மை நட்டார்மாட்டுச் சிறக்கும்; அவையினது நன்மை மாறுபாடின்றி அன்புடைத்தாமாயின் விளங்கும்; †விசைமாட்சிமைப்பட்ட தேரினதுநலம் ஊரும்பாகனாற் பெருமையெய்தும்; ஊரினது நலம் அவ்வூர்க்கு முதன்மையுடையவன் நன்மையானேநினைக்கப்படும்; எ-று.

உஎ அஞ்சாமை யஞ்சுக வொன்றிற் றனக்கொத்த
வெஞ்சாமை யெஞ்சு மளவெல்லா—நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள்பெறினு நாடாமை
நட்டார்கண் விட்ட வினை.

இ-ள்; பழி முதலாயினவற்றை அஞ்சாமையை அஞ்சுக; பொருந்துமாயிற் றனக்குத் தகுதியாகிய ஒழுக்கங்களைத் தான் இறக்குமளவும் தவிராதொழிக; தன்மனம் அறியக் கோடாதொழிக, கோடி பொருள்பெற்றானாயினும்; ஆராயாதொழிக, தனக்கு நட்டாராயினார்மாட்டுத் தான் செய்யவிட்ட காரியத்தை; எ-று.

அல்லதூஉம் நட்டாரோடுகூடிச் செய்யாத வினையை நாடாதொழிகவென்றுமாம். (உஎ)

உஅ கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலையின்
பாலோக்கி வாழுங் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறாஉங் கூற்று.

இ-ள்; அரசன் செங்கோனோக்கி வாழும் உலகத்துக்குடிகளெல்லாம்; பெற்றதாயினது முலைப்பானோக்கி வாழும் குழவிகளெல்லாம்; வானத்தின்

---

* 'அறனிலை திரியா அன்பி னவையத்து' என்பது புறம்-எக.

† விசை-செலவு; 'கடுவிசைக்கதநாய்' என்பது புறம்-உ0டு.

கணுள்ள தளியினை நோக்கி வாழும் உலகமெல்லாம்; அவ்வுலகின் சாக்காட்டினை நோக்கி இன்புறாஉம் கூற்றம், எ-று. (உசு)

உசு கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணருங் கோளுணர்ந்தாற்
றத்துவ மான நெறிபடரு மந்நெறி
யிப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பா
லுயர்ந்த வுலகம் புகும்.

இ-ள்; ஒருவன் கற்கவே மிகவும் பேதைமை குறையும்; பேதைமை குறையப் புல்லறிவுதீர்ந்து இவ்வுலகத்துள்ள இயற்கையையறியும்; அவ்வியற்கையை யறிந்தான் மெய்ம்மையாகிய வீட்டுநெறியின்கட் செல்லும்; அச்செல்லப்படுகின்ற நெறியானே இவ்வுலகின்கட் புகழை நிறுத்தி உப்பக்கத்து உயர்ந்த வீட்டுலகம் புகும்; எ-று. (உஎ)

௩௦ குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவ—மழித்துச்
செறுவுழி நிற்பது காமந் தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு.

இ-ள்; குழித்த நிலத்துள்ளே நிற்பது நீர்க்கியற்கையாவது; பல்லோரும் பழிக்கப்பட்டவன்மாட்டே பாவம் நிற்பது; தனக்கு நண்பாயினர் அழித்துத்தடுக்கவும் தான் சென்றுழிச்செல்வது காமமாவது; தனக்கு ஒரு துன்பம் வந்துற்றால் அவ்விடத்தே வந்துதவிநிற்பது அறிவு; எ-று. (உஅ)

௩க திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—யெற்றுள்ளு
மின்மையி னின்னாத தில்லை* யிலமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.†

இ-ள்; செல்வம்போல் ஒருவற்கு வலியுடையது பிறிதில்லை: கல்வி போலப் பயன்படுவன பிறவில்லை; யாதனுள்ளும் இன்மைபோல இன்னாத தொன்று இல்லை; யாதொரு பொருளும் இலமென்று பிறரையிரக்கும் வன்மைபோல் வலியதிறனில்லை; எ-று.

---

* 'இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி, னின்மையே யின்னாதது' (திருக்குறள்-௧௦௪௧.)

† 'இரந்துதீர் வாமென்னும் வன்மையின் வன்பாட்டதில்' (ஷை-௧௦௬௩) 'வன்பட்டதில்' எனவும் பாடம்,

அல்லதூஉம் இரந்துசென்றார்க்கு யாதும் இலமென்று மறுக்கும் வன்மைபோல வலியதிறமில்லை யென்றுமாம். (உக)

௩உ புகைவித்தாற் பொங்கழ றோன்றுஞ் சிறந்த
நகைவித்தாற் றோன்று முவகை—பகையொருவன்
முன்னம்வித் தாகி முளைக்கு முளைத்தபின்
னின்னாவித் தாகி விடும்.

இ-ள்; புகை காரணமாக ஓங்குநெருப்பு உண்டென்று அறியலாம்; ஒருவன் மாட்டுள்ள முறுவல் காரணமாக அவன் மனத்துள்ள உவகை தோன்றும்; ஒருவன் செய்த இன்னாக்குறிப்புச் செய்கைகளான் அவன் மனத்துள்ள பகைமை வெளிப்படும்; அப்பகைமை பின்பு இன்னாமைகளுக்குக் காரணமாகத் தோன்றும்; எ-று. (௩0)

௩௩ பிணியன்னர் பின்னோக்காப் பெண்டி ருலகிற்
கணியன்ன ரன்புடைய மாக்கள்—பிணிபயிலும்
புல்லன்னர் புல்லறிவி னாடவர் கல்லன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர்.

இ-ள்; ஒருவர்க்கு உற்றநோயோடு ஒப்பர் பின்புவரும் பழியை ஆராயாது செய்யுமகளிர்; உலகத்திற்கு அலங்காரத்தை ஒப்பர் எல்லா வுயிர்க்கும் அன்புடைய மக்கள்; பிறர்க்குப் பிணியை வருவிக்கும் நச்சுப்புல்லோடு ஒப்பர் புல்லியவறிவினையுடைய ஆடவர்; கல்லோடு ஒப்பர் வலிய நெஞ்சத்தையுடையார்; எ-று. (௩க)

௩௪ அந்தணரி னல்ல பிறப்பில்லை யென்செயினுந்
தாயிற் சிறந்த தமரில்லை யாதும்
வளமையோ டொக்கும் வனப்பில்லை யெண்ணி
னிளமையோ டொப்பது மில்.

இ-ள்; மறையவர் பிறப்புப்போல மிக்க பிறப்பு இல்லை; எல்லா நன்மையுஞ் செய்தாராயினும் தாயைப்போல மிக்க தமர் இல்லை; செல்வத்தோடொக்கும் அழகு மற்றியாதும் இல்லை; ஆராயின் இளமைக்காலம்போல் எல்லாநன்மையும் முடிக்கலாவது பிறிதொன்றுமில்லை; எ-று. (௩உ)

௩௫ *இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பி
னீருண்டார் நீரால்வாய் பூசுப—தேரி
னரிய வரியவற்றாற் கொள்ப பெரிய
பெரியாரா னெய்தப் படும்.

---

* "அயிலானே போழ்வ ரயில்" என்பது பழமொழி (௩௩எ).

இ-ள்; இரும்பாற்செய்த கருவிகளானே இரும்பினை இடையே போழ்வர்; பெருஞ்சிறப்பினையுடைய நீரினையுண்டார் நீரானே அந்நீரினையுண்டவாயினைப்பூசுவர்; ஆராயிற் பெறுதற்கரிய பயன்களைப் பெறுதற்கரிய காரணங்களான் முடித்துக்கொள்வர்; பெரியவாயுள்ள சிறப்புக்கள் பெரியாரான் எய்தப்படும்; எ-று. (கங)

கச மறக்களி மன்னர்முற் றோன்றுஞ் சிறந்த
வறக்களி யில்லாதார்க் கீயுமுற் றோன்றும்
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாங் கயக்களி
யூரிற் பிளிற்றி விடும்.

இ-ள்; வீரத்தான் வருங் களிப்புச் சேவகர்க்குத் தம்மையாண்ட அரசர் முன்பு தோன்றும்; ஒருவன் மனத்தின்கண் மிக்க அறக்களிப்பு வறுமையுற்றார்க்கு உதவுமிடத்துத் தோன்றும்; எஞ்ஞான்றுஞ் செல்வராயினர் தம்மையொன்று ஏவினால், அவ்வேவலான் வருங் களிப்பு நல்கூர்ந்தார் மாட்டுத் தோன்றும்; கயமையான்வருங் களிப்புத் தான்வாழும் ஊரின்கட் டோன்றி ஆரவாரம் பெருக்கிவிடும்; எ-று.

அல்லதூஉம் 'வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாம்' என்பது, யாதானும் ஒரு பொருள் பெற்றால் அதனைக்கண்டு வியக்குங்களி நல்கூர்ந்தார் மாட்டுத் தோன்றுமென்றுமாம். (கச)

கரு மையாற் றளிர்க்கு மலர்க்கண்கண் மாவிரு
ணெய்யாற் றளிர்க்கு நிமிர்சுடர்—பெய்ய
முழங்கத் தளிர்க்குங் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமா மேல்.

இ-ள்; அஞ்சனத்தாற் றளிர்க்கும் மலர் போன்றிருந்த கண்கள்; பேரிருளின்கண் நிமிர்ந்தெரியும் விளக்கு நெய்பெற்றாற் றளிர்க்கும்; பெய்தற்கு முழங்கவே தளிர்க்குங் குருகிலை; நட்டார்க்குப் பொருள் வழங்கத் தளிர்ப்பர் மேலாயினர்; எ-று. (கரு)

கசு நகையினிது நட்டார் நடுவட் பொருளின்
றொகையினிது தொட்டு வழங்கிற்—றகையுடைய
பெண்ணினிது பேணி வழிபடிற் பண்ணினிது
பாட லுணர்வா ரகத்து.

இ-ள்; நட்டார் நடுவணிருந்து நகையினிது; பொருளின் கூட்டம் இனிது தொட்டுவழங்குவானாயின்; சிறப்புடைய பெண்ணினிது தன்கொழு

னைப் பேணி வழிபடின்; பண்ணினிது பாட்டின் றெழிலை அறிவாரிடத்து; எ-று. (௩௯)

௩௯ கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்று
மிரப்பவர்க்குச் செல்சாரொன் றீவோர்—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சார் வுயிர்க்கு.

இ-ள்; கரப்பவர்க்குப் பற்றுக்கோடு முகங்கவிழ்தல்; எஞ்ஞான்றும் இரப்பவர்க்குப் பற்றுக்கோடாவார் யாதானும் ஒன்றனைக்கொடுப்பார்; பரப்புநிரம்பிய சேனைக்குப் பற்றுக்கோடு தறுகண்மை; ஒருவனுயிருக்குப் பிறவுயிர்களுக்குப் பற்றுக்கோடு ஊனுண்ணாமை; எ-று. (௩௭)

௪௦ கண்டதே செய்பவாங் கம்மிய ருண்டெனக்
கேட்டதே செய்ப புலனுள்வார்—வேட்ட
வினியவே செய்ப வமைந்தார் முனியாதார்
முன்னிய செய்யுந் திரு.

இ-ள்; தாங் கண்ணாற்கண்டதனையே செய்யவல்லாராங் கம்மியர்; உண்டென்ற நூலை நெறியாற்கேட்டதனையே செய்வர் அறிவினையாள்வார்; தாங் காதலித்தனவற்றுள் எல்லார்க்கும் இனியனவற்றையே செய்வர் குணங்களானமைந்தார்; சினமில்லாதார் கருதினவற்றையே செய்யும் திருமகள்; எ-று. (௩௮)

௪௧ திருவுந் திணைவகையா னில்லா பெருவலிக்
கூற்றமுங் கூறுப செய்துண்ணு—தாற்ற
மறைக்க மறையாதாங் காம முறையு
மிறைவகையா னின்று விடும்.

இ-ள்; செல்வங்களும் குடிப்பிறப்பி னன்மையான் நில்லா; பெருவலியையுடைய கூற்றமும் தானுண்ணப்படுகின்றவன் சொல்லுவனவற்றைச் செய்து உண்ணு; மிகவும் மறைப்ப மறைவுண்ணுது காமமும்; முறைமையும் அரசன் வகையானே நிற்பது; எ-று. (௩௯)

௪௨ பிறக்குங்காற் பேரெனவும் பேரா விறக்குங்கா
னில்லெனவு நில்லா வுயிரெனைத்து—நல்லா
ளுடம்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதில்
கண்டனவுங் காணு கெடும்.

இ-ள்; உயிரெல்லாம் பிறக்கும் பொழுது தவிரெனவுந் தவிரா; இறக்கும்பொழுது நிற்கவெனவும் நில்லா; திருமடந்தை மனமகிழ்ந்து உடம்படிற் செல்வந் தானே பெருகும்; அச்செல்வங் கெடும்பொழுது காணப்பட்டுள்ளவாய்நின்ற பொருளுங் காணப்படாவாய்க் கெடும்; எ-று.

சங. போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடு மரமெல்லா—நீர்பாய்
மடையின்றி நீணெய்தல் வாடும் படையின்றி
மன்னர்சீர் வாடி விடும்.

இ-ள்; போரின்றிவிடிற் பொருபடையாளர் சீர்மையழியும்; கீழ் வீழ்ந்த வேருமாயின் மரங்களெல்லாம் உலரும்; நீர்பாயும் மடையின்கண் நீரின்றி நீண்ட நெய்தன் மலர்கள் உலரும்; சேனையின்றிவிடின் அரசர் சீர்மை வாடும்; எ-று. (சங)

சச. ஏதிலா ரென்பா ரியல்பில்லார் யார்யார்க்குங்
காதலா ரென்பார் தகவுடையார்—மேதக்க
தந்தை யெனப்படுவான் றன்னுவாத்தி தாயென்பாள்
முந்துதான் செய்த வினை.

இ-ள்; ஒருவர்க்கு அயலாராவார் குணமில்லாதார்; யாவர்க்கும் அன்புபடப்படுவார் குணமுடையார்; விரும்பத்தக்க தாதை யெனப்படுவான் றன்னை ஓதுவித்தவன்; தாயென்பாள் முற்பிறப்பிற் றான்செய்த நல்வினை; எ-று. (சஉ)

சரு பொறிகெடு நாணற்ற போழ்தே கெறிபட்ட
வைவராற் றானே வினைகெடும் பொய்யா
நலங்கெடு நீரற்ற பைங்கூழ் நலமாறி
னண்பினார் நண்பு கெடும்.

இ-ள்; செல்வங்கெடும் ஒருவற்கு நாணின்றி ஒழிந்தபொழுதே; தன் வயத்தனவாய் வழிப்பட்ட ஐவகைப்பொறிகளாலும் பிறப்பிற்குக் காரணமாகிய வினைகெடும்; பழுதுபடாத விளைவினலங் கெடும் நீரற்ற பைங்கூழ்; மனத்தின்கண் உளதாம் ஈரந்துவரின் நண்புடையார் நண்பு கெடும்; எ-று.

அல்லதூஉம் 'பொறிகெடு நாணற்ற போழ்தே' என்பது*கயிறற்றபொழுதே †பாவையாகிய பொறிகெடும் என்றுமாம். (சரு)

* யந்திரக்கயிறு. † மரப்பாவை. "மரப்பாவை நாணா லுயிர்மருட்டி யற்று" என்புழிக் காண்க (திருக்குறள்-க0உ0). "பொறியறு பாவையிற் பொம்மென விம்மி" என்பது சிந்தாமணி (நாம-ரு0ச).

சசு நன்றிசா நன்றறியா தார்முன்னர்ச் சென்ற
விருந்தும் விருப்பிலார் முற்சா மரும்புணர்ப்பிற்
பாடல்சாம் பண்ணறியா தார்முன்ன ரூடல்சா
மூட லுணரா ரகத்து.

இ-ள்; செய்த நன்றியை அறியாதாரிடத்துச் செய்த நன்றிகெடும்; விருப்பிலாரிடத்துச் சென்ற விருந்து வாடும்; அரிதாகப் புணர்ந்த புணர்ப்பினையுடைய பாடல்கெடும், பண்ணினையறியாதார்முன்பு; ஊடியவூடலுங் கெடும், ஊடியவற்றை உணராதொழிந்தார் மாட்டு; எ-று. (சச)

சஎ நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலந் தூக்கி
னகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்ன
முகம்போல முன்னுரைப்ப தில்.

இ-ள்; மலருண்டென்பதனை அம்மலரினது நாற்றமே அறிவிக்கும்; ஒருவன் சொல்லியசொல்லே அறிவிக்கும் அவன் செய்கை நலத்தினை; ஆராயின் உட்கிடந்த தீமையை மனமே அறிவிக்கும்; மனத்தின்விளைவினை முகம்போல முற்படவறிவிப்பது மற்றொன்றில்லை; எ-று. (சரு)

சஅ மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையுந்
தவமிலா ரில்வழி யில்லை தவமு
மரசிய லில்வழி யில்லை யரசனு
மில்வாழ்வா ரில்வழி யில்.

இ-ள்; மழையின்றிவிட்டால் உலகத்தின் மக்கட்கு உணவில்லை; அம்மழைதானும் தவஞ்செய்யாதார் இருப்பிடங்களுள் இல்லையாம்; அத்தவஞ்செய்கைதானும் அரசின்முறையை இல்லாத அரசிருப்பிடங்களுள் இல்லை; அவைபோல, இல்லையாம்: அவ்வரசன்றானும் குடிகளில்லாத விடங்களுள்; எ-று, (சசு)

சகூ பூவினு னந்தும் புனைதண்டார் மற்றதன்
றாதினு னந்துஞ் சுரும்பெல்லாந்—தீதில்
வினையினு னந்துவர் மக்களுந் தத்த
நனையினு னந்து நறா.

இ-ள்; பூவினான் மிக்குப் பொலியும் புனையப்பட்ட தண்டார்; அப்பூவின் றாதினான் மிக்குப்பொலியும் வண்டுகளெல்லாம்; குற்றமில்லாத செய்

கைகளான் மிகுவர் மக்களும்; தத்த நிலைகொள்கையான் மிக்கு நல்லவாம் (௪௭)
கள்; எ-று.

௫௦ சிறந்தார்க் கரிய செறுதலெஞ் ஞான்றும்
பிறந்தார்க் கரிய துணைதுறந்து வாழ்தல்
வரைந்தார்க் கரிய வகுத்தூ ணிரந்தார்க்கொன்
றில்லென்றல் யார்க்கு மரிது.

இ-ள்; தொடர்ச்சி மிக்கார்க்கு அரியசெறுதல்; எஞ்ஞான்றும் பிறந்தார்க்கு அரிய தம்மினத்தைத் துறந்து வாழ்தல்; உணவினை வரைந்தார்க்கு அரிய பிறர்க்குப் பகுத்துண்டல்; இரந்து வந்தார்க்கு அரியதாமொன்றினை இல்லையென்றல் யாவர்க்கும் அரிது; எ-று. (௫௦)

௫௧ இரைசுடு மின்புறு யாக்கையுட் பட்டா
லுரைசுடு மொண்மை யிலாரை—வரைகொள்ளா
முன்னை யொருவன் வினைசுடும் வேந்தனையுந்
தன்னடைந்த சேனை சுடும்.

இ-ள்; இரை......பட்டால் எ-து பிணியினாற் றுன்பமுறுகின்ற உடம்பின்கட்பட்டவுணவு துன்பத்தைச் செய்யும் எ-று. உரை......யிலா ரை எ-து அறிவினொண்மையிலாதார் தம்வாயிற் சொல்லே தங்களைத்துன் பம் உறுத்தும் எ-று. வரை...... சுடும் எ-து முற்காலத்துச் சிலங்களை வரைந்து கொள்ளாது நெறியைக்கடந்து செய்த தீவினைகள் பிற்காலத்து வந்து சுடும் எ-று. வேந்தனை......சுடும் எ-து வரைகொள்ளாத தன்னடை ந்த சேனை வேந்தனைச்சுடும் எ-று; இதற்கு முன்சொன்ன வரைகொள்ளா என்னுஞ்சொல்வருவித்துரைக்கப்பட்டது. (௫௧)

௫௨ எள்ளற் பொருள திகழ்த லொருவனை
யுள்ளற் பொருள துறுதிச்சொ—லுள்ளறிந்து
சேர்தற் பொருள தறநெறி பன்னூலுந்
தேர்தற் பொருள பொருள்.

இ-ள்; ஒருவற்கு இகழத்தக்கது பிறரை யிகழும் இகழ்ச்சி; ஒருவனை நட்பென்று உள்ளத்தகுவது அவன் சொல்லும் உறுதிச்சொல்லால்; உண்மையறிந்து அடையத்தக்கது அறநெறி; எப்பொழுதும் ஆராயத்தக்கன சகல நூல்களினுஞ் சொன்ன பொருள்கள்; எ-று. (௫௨)

௫௩ யாறு ளடங்குங் குளமுள வீறுசான்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.

இ-ள்; யாறுகள் புகுந்தாலும் புறம்போகாது உள்ளடங்கும் குளங்களு முள ; சிறப்பமைந்த அரசரான் விரும்பப்படுங் குடிகளுமுள; பழைய மரபினையுடைய வேதங்களைப்போலும் பாட்டுக்களுமுள ; யாகம்போலும் ஈகைகளுமுள ; எ-று. (௫௩)

௫௪ எருதுடையான் வேளாள னேலாதான் பார்ப்பா
னொருதொடையான் வெல்வது கோழி—யுருவோ
டறிவுடையா ளில்வாழ்க்கைப் பெண்ணென்ப * சேனை
செறிவுடையான் சேனா பதி.

இ-ள்; எருதுடையான் வேளாளனாவான் ; ஒரெற்றுன் † வெல்வதாயுள்ள கோழிபோல ஒருவரோடு என்றும் மாறுபடாதான் பார்ப்பானாவான்; வடிவழகும் அறிவுமுடையாள் ஒருவற்கு இல்வாழ்க்கையுடைய பெண்ணாவாள் ; சேனையொடு மேவியிருப்போன் சேனாபதியாவான்; எ-று. (௫௪)

௫௫ யானை யுடையார் கதனுவப்பர் மன்னர்
கடும்பரிமாக் காதலித் தூர்வர் கொடுங்குழை
நல்லாரை நல்லவர் நாணுவப்பா ரல்லாரை
யல்லா ருவப்பது கேடு.

இ-ள்; யானையுடையார் யானையினது சினத்தையுவப்பார்; அரசராயினோர் கடிய செலவினையுடைய குதிரையைக் காதலித்து மேற்கொள்வர்; கொடுங்குழையையுடைய நல்லாரை நல்லார் நாணுவப்பர் ; நாணுடையரல்லாத மகளிரை அறிவுடையரல்லாதார் உவர்தாற் கேடாம்; எ-று. (௫௫)

௫௬ கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானிற்
றுன்னிய கேளிர் பிறரில்லை மக்களி
னொண்மையவாய்ச் சான்ற பொருளில்லை யீன்றாளோ
டெண்ண கடவுளு மில்.

---

* 'சேனைச்செறிவு' என்பதும் பாடம்.
† எற்றுதல்'- காலாற்றள்ளுதல்: 'ஓரொற்றுன்' என்பதும் பாடம்.

இ-ள்; ஒருவற்குக் கண்போலச்சிறந்த உறுப்புப் பிறிதொன்றில்லை; தம்மைக்கொண்டானைப்போலச் செறிந்த சேளிர் மகளிர்க்கில்லை; புதல்வரைப்போல நன்மைநெறியமைந்த பொருளில்லை; தன்னை யீன்றாள்போல் வதோர் தெய்வம் எத்தெய்வத்துள்ளும் இல்லை; எ-று. (ருச)

ருஎ கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்
செற்றன்னர் செற்றாரைச் சேர்ந்தவர்—தெற்றென
வுற்ற துரையாதா ருள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறிவி னார்.

இ-ள்; கற்றானையர் அக்கற்றாரைக் காதலிப்பவர்; ஒருயிர்க்குங் கண்ணோட்டமில்லார் இடும்பைசெய்வாரோடு ஒப்பர்; அவரைச்சேர்ந்தொழுகுவார் தெளியத்தந்நட்டார்க்கு உறுதியாயினவுரையாதார்; உள்கரந்து பாம்புறையும் புற்றேயனையர் புல்லறிவினார்; எ-று. (ருரு)

ருஅ மாண்டவர் மாண்ட வினைபெறுப வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே—யாண்டும்
பிறப்பார் பிறப்பா ரறனின் புறுவர்
துறப்பார் துறக்கத் தவர்.

இ-ள்; அறிவான் மாட்சிமைப்பட்டார் மாட்சிமைப்பட்ட செயல்களைப் பெறுவர்; அம்மாட்சிமையை வேண்டாதார் தமக்கு விருப்பமில்லாத வினைப்பயன்களையும் பெறுவர்; எக்காலமும் மக்கட்பிறப்பிற் பிறப்பாரெல்லாரும் அறத்தையே விரும்புவார்; துறக்கத்தை வேண்டுவோர் துறப்பார்கள்; எ-று. (ருசு)

ருகூ என்று முளவாகு நாளு மிருசுடரு
மென்றும் பிணியுந் தொழிலொக்கு—மென்றுங்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாருஞ்
சாவாரு மென்று முளர்.

இ-ள்; எக்காலத்தும் இடையறாது உளவாம் நாண்மீன்களும் இருசுடரும்; இறந்தநாள்களும் பிணிவருநாள்களும் உழவுமுதலான தொழில்களும் எல்லாமொக்கும்; எக்காலத்தும் கொடுப்பாருங் கொள்வாரு முளர்; பிறப்பாருஞ் சாவாரும் எக்காலத்தும் உளராவர்; எ-று.
எனவே உலகினது இடையறாமை யுணர்த்தியவாறு. (ருஎ)

௬௦ இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகனொழிந்து வாழ்வான்
றனிய னெனப்படுவான் செய்தநன் றில்லா
னினிய னெனப்படுவான் யார்யார்க்கே யானு
முனியா வொழுக்கத் தவன்.

இ-ள்; இனிதாக உண்பானென்று சொல்லப்படுவோன் ஒருயிரையுங் கொல்லாதே உண்பான்; எல்லாரானும் வெறுக்கத்தக்கானென்பான் முகந் திரிந்து வாழ்வான்; துணையில்லானென்று சொல்லப்படுவோன் தான்செய்த தொரு நல்வினையில்லாதான்; எல்லார்க்கும் இனியனெனப்படுவோன் யாவர்) யாவர்க்கேயாயினும் வெறுக்கத்தகாத செய்கையையுடையான்; எ-று. (இ-அ

௬௧ ஈத்துண்பா னென்பா னிசைநடுவான் மற்றவன்
கைத்துண்பான் * காங்கியெனப்படுவான் றெற்ற
நகையாகு நண்ணார்முற் சேறல் பகையாகும்
பாடறியா தானை யிரவு.

இ-ள்; பிறர்க்குக்கொடுத்துண்பானென்று சொல்லப்படுவோன் புகழை நிறுத்துவான்; கொடுத்துண்பவன் கைப்பொருளையுண்பான் அவாமிக்கா னெனப்படுவோன்; தெளியவேஇகழ்ச்சியாம் தன்னைவிரும்பாதார் முன்னர் ஒன்றனை நச்சிச்சேறல்; தகுதியறியானைச் சென்றிரந்தாற் பகையாகும்; எ-று.

௬௨ நெய்விதிர்ப்ப நந்து நெருப்பழல் சேர்ந்து
வழுத்த வரங்கொடுப்பர் நாகர் தொழுத்திறந்து
கன்றூட்ட நந்துங் கறவை கலம்பரப்பி
நன்றூட்ட நந்தும் விருந்து.

இ-ள்; நெய்யைப்பெய்ய நெருப்புச்சுடர் வளரும்; அடைந்துபோற்றத் தேவர் வரங்கொடுப்பர்; தொழுவைத்திறந்து கன்றுகளை யூட்டக் கறவைகள் நந்தும்; கலங்களைப்பரப்பி † மிகவூட்ட நந்தும் விருந்துகள்; எ-று

௬௩ பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழியின்மை கேட்டா லறிக பொருளி
னிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியாற்
போற்றாதார் போற்றப் படும்.

---

* காங்கி வடமொழிச் சிதைவு.

† 'நன்றாகவூட்ட' என்பதும் பாடம்.

இ-ள்; பழிபட வாழாமை ஒருவன் தன் மக்கட்பேற்றானே அறிக; ஒருவன் தனக்குநண்பல்லாமை கேடுவந்தால் அறிக; பொருள்வருகின்ற நன்மையானே அவன தாக்கம் அறிக; ஒருவன் புகழ்படவழங்குமாயிற் றன் பகையாலும் போற்றப்படும்; எ-று. (சுக)

சுச கண்ணுள்ளுங் காண்புழிக் காதற்றாம் பெண்ணி
னுருவின்றி மாண்ட வுளவா மொருவழி
நாட்டுள்ளு நல்ல பதியுள பாட்டுள்ளும்
பாடெய்தும் பாட்டே யுள.

இ-ள்; தன்கண்ணுள்வைத்துக் காணுமிடம் அவனாற் காதலிக்குங் காதலையுடைத்தாம்; பெண்களுள் வடிவின்றியே குணமாண்டன உளவாம்; ஒருவனாட்டுள்வைத்தும் ஒரு கூற்றுள்ளே நல்லபதி உளவாம்; பாட்டுக்கள் பலவற்றுள்ளும் பெருமையெய்தும் பாட்டுக்களுள; எ-று. (சுஉ)

சுரு திரியழற் காணிற் றொழுவர் விறகி
னெரியழற் காணி னிகழ்ப—வொருகுடியிற்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றா
னிளமைபா ராட்டு முலகு.

இ-ள்; திரியானெரியுஞ் சுடரைக்கண்டாற் றொழுவர்; விறகானெரியுஞ் சுடரைக்கண்டால் இகழ்வர்; அவைபோல, ஒருகுடிப்பிறந்து கல்வியின்றியே மூத்தானைக்கைவிட்டு இளையானாயினும் கற்றானையே பாராட்டுவர்உலகத்தார்; எ-று. (சுரு)

சுசு கைத்துடையான் காமுற்ற துண்டாகும் வித்தின்
முளைக்குழா நீருண்டே லுண்டாந் திருக்குழா
மொண்செய்யாள் பார்த்துறி னுண்டாகு மற்றவ
டுன்புறுவா ளாகிற் கெடும்.

இ-ள்; கைப்பொருளுடையான் காதலித்தது உளதாம்; வித்தின் முளைக்கூட்டம் நீருண்டாயின் உளதாம்; செல்வக்கூட்டம் ஒள்ளிய செய்ய பூமகள்பரிவுறின்ஒருவற்குஉளதாம்;மற்றவள்காதலியாது துன்புறுமாயின் அச்செல்வத்தின் றொகுதி அவற்குக் கெடும்; எ-று. (சுசு)

சுஎ வளனுண் டொழுக்க நிறம்பெறாஉ நீர்கிலத்துப்
புல்லினு னின்புறாஉங் காலேய நெல்லி
னரிசியா னின்புறாஉங் கீழெல்லாந் தத்தம்
வரிசையா னின்புறாஉ மேல்.

இ-ள்; ஊனையுண்டு புலிநிறம்பெறும், நீருடைய நிலத்தெழுந்த புல்லினான் இன்புறூஉம் நிரைமுதலாயின; அதுபோல, நெல்லினரிசியாற் பசிதீர்ந்து இன்புறுவர் கீழாயினர்; மேலாயினர் தத்தந்தகுதிச்செயலான் இன்புறுவர்; எ-று. (சுரு)

சுஎ பின்னவாம் பின்னதிர்க்குஞ் செய்வினை யென்பெறினு
முன்னவா முன்ன மறிந்தார்கட்—கென்று
மவாவா மடைந்தார்கட் குள்ளந் தவாவா
மவாவில்லார் செய்யும் வினை.

இ-ள்; கருத்தான் ஆராய்ந்தறியாதார்க்குப் பின்பு நடுக்கத்தைச்செய்யும் வினைகள் தோன்றுவாம்; அறிந்தார்க்குப் பின்னதிர்க்கும் செய்வினைகள் என்பெறினும் முன்னவாகத் தோன்றும்; எல்லாவாற்றானும் அவாவேயாகும் யாதானும் ஒன்றனை அடைந்தார்க்கு உள்ளம்; கெடாவாம் அவாவில்லார் செய்யும் வினைப்பயன்கள்; எ-று. (சுசு)

சுசு கைத்தில்லார் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்
வைத்தாரி னல்லர் வறியவர்—பைத்தெழுந்து
வைதாரி னல்லர் பொறுப்பவர் செய்தாரி
னல்லர் சிதையா தவர்.

இ-ள்; கைப்பொருள் இல்லாதார் கைப்பொருளுண்டாகிக்காப்பாரின் மிக நல்லர்; அப்பொருளை வைத்திழப்பாரின் வறியவர் மிக நல்லர்; வெகுண்டெழுந்து வைதாரின் மிக நல்லர் பொறுப்பவர்; உதவியைச் செய்தாரின் நல்லர் அதனை மறவாதார்; எ-று.

அல்லதூஉம் 'செய்தாரினல்லர் சிதையா தவர்' என்பது அறஞ்செய்தாரின் நல்லர் அவ்வறத்தை யழியாதார் என்றுமாம். (சுஎ)

எ0 மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை—யகனீர்ப்
புலத்தியல்பு புக்கா னுரைக்கு நிலத்தியல்பு
வான முரைத்து விடும்.

இ-ள்; மகனது குணமே பிறர்க்கறிவிக்கும் தந்தையது நற்செய்கையை; ஒருவன் முகமே உரைக்கும் அவன் மனத்தின்கணுள்ள காதலை; அகன்ற நீர்மையினையுடைய புலத்தினது நன்மையைப் புலத்தின்கட் புக்கவன் உரைக்கும்; நிலத்தின் மக்களது தன்மையை மழை பெய்தும் பெய்யாதும் அறிவிக்கும்; எ-று. (சுஅ)

எக பதிநன்று பல்லா ருறையி னொருவன்
மதிநன்று மாசறக் கற்பி—னுதிமருப்பி
னேற்றான்வீ றெய்து மினநிரை தான்கொடுக்குஞ்
சோற்றான்வீ றெய்துங் குடி.

இ-ள்; ஊர் நன்றாம் பலரும் உறைவராயின்; ஒருவன் மதிநன்றாம் மாசற நூல்கற்றானாயின்; கூரிய கோட்டினையுடைய ஏற்றினானே சிறப்புப் பெறும் இனநிரைகள்; பிறர்க்குக் கொடுக்குஞ் சோற்றினானே சிறப்புப் பெறுந் தான்பிறந்த குடி; எ-று. (சுக)

எஉ ஊர்ந்தான் வகைய கலினமா நேர்ந்தொருவ
னாற்றல் வகைய வறஞ்செய றொட்ட
குளத்தனைய தூம்பி னகலங்க டத்தம்
வளத்தனைய வாழ்வார் வழக்கு.

இ-ள்; ஏறினான் வகையவாயிருக்கும் முகக்கருவியையுடைய புரவிகள்; தலைப்பட்டு ஒருவனாற்றுதல்வகையவாம் அறஞ்செய்கை; தோண்டின குளத்தினதளவினவாம் தூம்பின்வாய்கள்; தத்தம் வருவாய்க்குத் தக்க வகையவாயிருக்கும் மனைவாழ்வார்செய்கை; எ-று. (எ0)

எங ஊழியும் யாண்டெண்ணி யாத்தன யாமமு
நாழிகை யானே நடந்தன—*தாழீயாத்
தெற்றென்றார் கண்ணே தெளிந்தனர் வெட்கென்றார்
வெஞ்சொலா லின்புறு வார்.

இ-ள்; ஊழிகளும் யாண்டுகளானே எண்ணப்பட்டு யாப்புற்றுக் கழிந்தன; யாமங்களு நாழிகையானே எண்ணப்பட்டு யாப்புற்றுக்கழிந்தன; தெளிந்தார் மாட்டே நீட்டியாதே தெளிந்தனர் நல்லார்; வெள்ளிய அறிவினையுடையார் பிறர்க்கு இன்னாத வெஞ்சொற் சொல்லியே இன்புறுவர்; எ-று. (எக)

எச கற்றான் றளரி னெழுந்திருக்குங் கல்லாத
பேதையான்வீழ்வானேற் கான்முரியு மெல்லா
மொருமைத்தான் செய்த கருவி தெரியுங்காற்
†பொய்யாவித் தாகி விடும்.

*“முரசு முழங்கு நெடுநக ரரசு துயிலீயாது” (பதிற்றுப்பத்து உ-உ) என்புழித் துயிலீயாது என்பது துயிலாது என்னும் வினைத்திரிசொல் என்றார் அதனுரைகாரர்; அதுபோல இதனையுங்கொள்க.
† ‘வீயாவித்தாகி’ எனவும் பாடபேதம்.

இ-ள்; கல்வியையுடையவன் கேடுற்றானாயின் அதனானிடர்ப்படான் எழுந்திருக்கும்; கல்லாத பேதையான்கேடுற்றானாயிற் கான்முரிந்தார்போல எறமாட்டான்; ஒருவன் ஒருபிறப்பிற் றான் செய்தனவெல்லாம் மறுபிறப்பின்கண் நுகருநுகர்ச்சிக்குக் காரணங்களாம்; மெய்யாகிய வுணர்ச்சி பழுதுபடாத வீட்டுக்கு வித்தாம் ஆராயின்; எ-று. (எஉ)

எரு தேவ ரனையர் புலவருந் தேவர்
தமரனைய ரோரூ ருறைவார் தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் கற்றன்னர்
கற்றாரைக் காத லவர்.

இ-ள்; தேவரே போல்வர் அறிவுடையார்; தேவர் தமரேயனையர்அவருறையும் ஊரின்கண் வாழ்வார்; அத்தமருள் வைத்துத் தேவரால் அருள் பெற்றவரோடு ஒப்பர் அச்சொல்லியவரைப் பேணியொழுகுவார்;கற்றாரோடு ஒப்பர் கற்றாரைக் காதலித்தொழுகுவார்; எ-று. (எங)

எச தூர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே மருத்துவன்
சொல்லென்ற போழ்தே பிணியுரைக்கு நல்லார்
விடுகென்ற போழ்தே விடுக வதற்குரியான்
றாவெனிற் றாயம் வகுத்து.

இ-ள்; ஒருவனோடு கொண்ட நட்புத் தூர்ந்துவிடும், பொய்பிறந்த பொழுதே; பிணிக்கு மருந்து செய்வோன் சொல்லுக என்ற பொழுதே பிணியுற்றவன் றானுற்ற பிணியைச் சொல்லும்; அதுபோல, அறிவுடைய நல்லார் இப்பெற்றிப்பட்ட தீவினைகளை விடுக என்றபொழுதே விட்டொழிக; ஒருபொருட்குரியான் தாவென்றால் அவனுரிமையைக் கூறிட்டுவிடுக; எ-று. விடுகவென்னுஞ் சொல்லை இதற்கும் வருவித்துக்கொள்க. (எச)

எஎ நாக்கி னறிப வினியதை மூக்கினான்
மோந்தறிப வெல்லா மலர்களு நோக்குள்ளுங்
கண்ணினாற் காண்ப வணியவற்றைத் தொக்கிருந்
தெண்ணினா னெண்ணப் படும்.

இ-ள்; நாவினானே அறிப இனிய பொருள்களை; மூக்கினானே மோந்தறிப எல்லாப் பூவினையும்; நோக்குண்டென்று கருதப்படுங் கண்ணினாற் காண்ப அணிய பொருள்களை; கண்ணாற் காணப்படாது செய்பொருள்களைப் பலருங் கூடியிருந்து அறிவானே ஆராயத்தகும்; எ-று. (எரு)

எஅ சாவாத வில்லை பிறந்த வுயிரெல்லாந்
தாவாத வில்லை வலிகளு—மூவா
திளமை யிசைந்தாரு மில்லை வளமையிற்
கேடின்றிச் சென்றாருமில்.

இ-ள்; பிறந்த உயிரெல்லாவற்றுள்ளும் சாவாத உயிர்கள் யாவுமில்லை; வலிகளுள்ளுங் கெடாத வலிகளில்லை; மூத்துக்கழியாத இளமையைப் பெற்றாரும் இல்லை; செல்வத்தாற் கேடின்றிச்சென்றாருமில்லை எ-று.

எகூ சொல்லா னறிப வொருவனை மெல்லென்ற
நீரா னறிப மடுவினை யார்கண்ணு
மொப்புரவி னானறிப சான்றாண்மை மெய்க்கண்
மகிழா னறிப நறா.

இ-ள்; ஒருவனது நன்மையையும் தீமையையும் அவன் சொல்லானே அறிப; மெல்லென்று நொய்தாய நீரானறிப மடுவினது நன்மையை; அது போல, யார்மாட்டுஞ் செய்யும் ஒப்புரவினானே அறிப ஒருவனது சான்றாண்மையை; உடம்பின்கணுள்ள களிப்பானே அறிப நறாவுண்டமையை;எ-று.

அ௦ நாவன்றோ நட்பறுக்குந் தேற்றமில் பேதை
விடுமன்றோ வீங்கப் பிணிப்பி னவாஅப்
படுமன்றோ பன்னூல் வலையிற் கெடுமன்றோ
மாறு ணிறுக்குந் துணிபு.

இ-ள்; நா நட்புக்கெடுக்குமன்றோ: ஆதலால் அதனைப் பாதுகாக்க; தெளிவில்லாத பேதை இறுகவே துன்பஞ்செய்து பிணிப்பிற் றங்கைப் பொருளை விடுமன்றோ; தன்னாசை அகப்பட்டுக்கெடுமன்றோ பலநூல்களையுங் கற்றுவல்ல வலையின்கண்ணே; ஒருவன் தன்னைக்கெடுக்குமன்றோ எல்லாரோடும் பகைகொள்ளும் பகைமையின்கட் டன்னை நிறுத்துந்துணிபுஎ-று.

அக கொடுப்பி னசனங் கொடுக்க விடுப்பி
னுயிரிடை யீட்டை விடுக்க வெடுப்பிற்
கிளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல்.

இ-ள்; ஒருவற்குக் கொடுப்பானாயின் றன்னுணவினைக் கொடுக்க; ஒன்றனை நீக்குவானாயின் ஒன்றனுயிர்க்கு இடையூறு வந்தனவற்றை நீக்குக; சிலரை எடுப்பானாயிற் றன்கிளைகளுட் டாழ்ந்தாரை எடுக்க; ஒன்றனைக்கெடுப்பானாயிற் றன்மனத்துள்ள வெகுளியைக் கெடுத்துவிடுக; எ-று. (எகூ)

அஉ நலனு மிளமையு நல்குரவின் கீழ்ச்சாங்
*குலனுங் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்
வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் பரமல்லாப்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.

இ-ள்; வடிவழகும் இளமையும் வறுமைவந்தவிடத்திற் கெடும்; குலனுங் குடிப்பிறப்புங் கல்லாமையுள தாயின் அவ்விடத்துக்கெடும்; வருவாயில்லாத குளத்தின்கீழ் விளையுநெற் கெடும்; மிக்கபண்டத்தின்கீழ்ப் பகடு கெடும்; எ-று. (அ௦)

அ௩ நல்லார்க்குந் தம்மூரென் றாரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றாரில்லை—யல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றாரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

இ-ள்; கல்வியான் நல்லார்க்குந் தம்மூரென்று ஊரில்லை: எல்லாவூரும் பயன்படும்; நன்னெறிசெல்லும் அருந்தவர்க்குத் தம்மூரென்று ஊரில்லை: எவ்வூரின்கண்ணும் பற்றுடையரல்லர்; கடையாயினார்க்குந் தம்மூரென்று ஊரில்லை: பயன்படார்; தங்கைப்பொருளுடையார்க்கும் எவ்வூரும் ஊராய்ப் பயன் படும்; எ-று (அக)

அ௪ கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்ற
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்ற
† மல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
‡ இல்லத்துத் தீங்கொழுகு வாள்.

இ-ள்; கற்றறியா வொருவர்க்குத் தம்வாயிற்சொற் கூற்றமாம்; மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காயே கூற்றமாம்; மற்றைத்தீவினைகளைச் செய்வார்க்கு அறக்கடவுளே கூற்றமாம்; ஒருவன் மனையின்கணிருந்து தீதாக ஒழுகுவாள் அவற்குக் கூற்றமாம்; எ-று. (அஉ)

---

* குலம் ஈண்டுவருணம்.

† "அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும், பல்லவையோர் சொல்லும் பழுதன்றே" என்றார் இளங்கோவடிகளும் (சிலப்-வழக்குரை காதை).

‡ 'இல்லிருந்து தீங்கொழுகு வாள்' எனவும் பாடம்.

அரு நீரான்வீ றெய்தும் விளைநில நீர்வழங்கும்
பண்டத்தாற் பாடெய்தும் பட்டினங் கொண்டாளு
நாட்டான்வீ றெய்துவர் மன்னவர் கூத்தொருவ
னாடலாற் பாடு பெறும்.

இ-ள்; நீரினாற் சிறப்புப்பெறும் விளைநிலம்; கடலான்வரும் பண்டத்தானே பெருமைபெறும் பட்டினங்கள்; தாங்கள் கொண்டு ஆளப்படுகின்ற நாட்டினாற் சிறப்புப்பெறுவர் அரசர்; நாடகங்கள் வல்லானொருவன் ஆடுதலாற் பெருமை பெறும்; எ-று.

'பாடலாற் பாடு பெறும்' என்று பாடமோதுவாருமுளர். (அரு)

அசு ஒன்றாக்கல் பெண்டிர் தொழினல மென்று
நன்றாக்க லந்தண ருள்ளம் பிறனாளு
நாடாக்கன் மன்னர் தொழினலங் கேடாக்கல்
கேளிரொரீஇ விடல்.

இ-ள்; ஒருமைப்பட்ட மனத்தாற் றங்கொழுநர் வழியேமுயன்றொழுகுதல் பெண்டிர்க்குத் தொழினலமாவது; எஞ்ஞான்றும் அறத்தினையேமுயன்றொழுகுதல் மறையவர்க்குக் கருத்தாவது; பிறனொரரசன் ஆளும் நாட்டினைக்கொள்ள முயறல் மன்னரது தொழினலமாவது; தமக்குக் கேட்டினை முயன்றொழுகுதலாந் தங்கேளிரைநீக்குதல்; எ-று. (அசு)

அஎ கள்ளாமை வேண்டுங் கடிய வருதலாற்
றள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியரோ டியார்மாட்டுங்
கொள்ளாமை வேண்டும் பகை.

இ-ள்; களவு காணாமை வேண்டும்; அஞ்சத்தகுந் துன்பத்தொடு வருதலாற் றனக்குத் தகுதியுடைய ஒழுக்கத்தை நீங்காமை வேண்டும்; சிறியாரோடு நட்புக்கொள்ளாமை வேண்டும்; யாவர்மாட்டும் பகைகொள்ளாமை வேண்டும்; எ-று. (அஎ)

அஅ பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக *வொட்டாரைக் கால மறிந்தாங்
கருக்குக யார்மாட்டு முண்டி சுருக்குக
செல்லா விடத்துச் சினம்.

* 'மாற்றாரை' எனவும் பிரதிபேதம்.

இ-ள்; நட்டாரை நன்மையின்கட் செலுத்திப் பெருக்குவிக்க; பகைவரைக் காலமறிந்து வலிசெய்க; யாவர் மனையகத்தும் உண்டலைத் தவிர்க; தனக்குச் செல்லாவிடத்திற் சினத்தைச் சுருக்குக; எ-று. (அசு)

அ௭ மடிமை கெடுவார்க ணிற்குங் கொடுமைதான்
பேணாமை செய்வார்க ணிற்குமாம் பேணி
னாணின் வரைநிற்பர் நற்பெண்டிர் நட்டமைந்த
தூணின்வரை நிற்குங் களிறு.

இ-ள்; கெடக்கடவார் மாட்டு முயற்சியின்மை நிற்கும்; பிறர் விரும்பாதன செய்வார்மாட்டுக் கொடுமை நிற்கும்; விரும்பப்பட்ட நாணெல்லையின்கண் நிற்பர் நற்பெண்டிர்; நட்டு அமைவுடைத்தாய தூணின்கண் நிற்பது களிறுவது; எ-று. (அஎ)

௯0 மறையறிப வந்தண் புலவர் முறையொடு
வென்றி யறிப வரசர்களென்றும்
வணங்க லணிகலஞ் சான்றோர்க்கஃ தன்றி
யணங்கல் * வணங்கின்று பெண்.

இ-ள்; மறைநூலை அறிவர் அந்தணராய புலவர்; நடுவு செய்கையொடு பகைவரை வெல்கையை அறிவர் அரசர்; எஞ்ஞான்றும் எல்லார்க்கும் பணிந்தொழுகுதல் சான்றோர்க்கு அணிகலமாவது; அப்பெற்றியின்றித் தெய்வத்தைச் சார்ந்தொழுகுதலின்றியே கொழுநனையே தொழுவது பெண்ணாவது; எ-று. (அஅ)

௯க பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள் காப்பினும்
பெட்டாங் கொழுகும் †பிணையிலி—முட்டினுஞ்
சென்றாங்கே சென்றொழுகுங் காமங் கரப்பினுங்
கொன்றான்மே னிற்குங் கொலை.

இ-ள்; பெண்டிர்க்குச் சொல்லிய ‡கற்புடைமை நெறியின்கண்ணே யுள்ளாய் ஒழுகும் குணமுடையாள்; எல்லாக்காவலும் உளவாயினும் தானினைந்தபடியே ஒழுகும் நல்லாரான் விரும்பப்படாதாள்; இடையூறுபட்டு முடியாதாயினும் சென்றவிடத்தே சென்றொழுகுங் காமமானது; மறைக்கினுங் கொன்றான்மேலே வெளிப்படுங் கொலையானது; எ-று (அகூ)

* 'வணங்குவ' எனவும் பாடம்.
† 'பிணியிலி' எனவும் பாடம். பிணி - பிணிப்பு.
‡ 'உண்மைநெறியின்கண்ணே' எனவும் பாடம்.

கூஉ வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியா
ரின்கண் பெருகி னினம்பெருகுஞ் சீர்சான்ற
மென்கண் பெருகி னறம்பெருகும் வன்கட்
கயம்பெருகிற் பாவம் பெரிது.

இ-ள்; ஒருவர்க்கு அஞ்சாமை பெருகின் வலிபெருகும்; பால்போன்ற மொழியினையுடைய மனைவியர் கண்ணோட்டம் பெருகிற் சுற்றம் பெருகும்; புகழமைந்த *அருள்பெருகின் அறவினை பெருகும்; வன்கண்மையுடைய கீழ்மைக்குணம் பெருகிற் பாவம் பெரிது; எ-று (கூ0)

கூங இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றங்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றந்
தமரல்லார் கையகத் தூண்.

இ-ள்; இளமைக்காலத்துக் கல்லாதொழிதல் குற்றமாம்; வருவாயில்லாத காலத்து வண்மை குற்றமாம்; தனக்குச் சுற்றத்தாரில்லாத காலத்துப் பிறரோடு வெகுடல் குற்றமாம்; தமரல்லாதார் கையகத்து உணவையுண்டலுங் குற்றமாம் ; எ-று. (கூக)

கூச எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக்†கடை.

இ-ள்; நன்மை பயந்ததாயினும் எல்லாவிடத்துங் கொலைதீதாம்; புதல்வரைக் கல்லாது வளரவிடுதல் தீதாம்; நல்லாருடைய வடிவழகு தீதாம் நாணில்லாராய் நிற்பின் ; தாம் பிறந்த குலந்தீதாம் குலத்துக்குத்தக்க ஒழுக்கமழிந்தவிடத்து ; எ-று. (கூஉ)

கூரு ஆசார மென்பது கல்வி யறஞ்சேர்ந்த
போக முடைமை பொருளாட்சி‡யார்கண்ணுங்
கண்ணோட்ட மின்மை முறைமை தெரிந்தாள்வா
னுண்ணோட்ட மின்மையு மில்.

---

* 'வளம்பெருகின்' எனவும் பாடம்.

† 'யழிந்தவிடை' எனவும் பாடம்.

‡ "ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந், தேர்ந்துசெய் வஃதே முறை" (திருக்குறள்-ருசக.)

இ-ள்; ஒருவனுக்குக் கல்வியின் பயனாவது ஆசாரமென்று சொல்லப்படுவது; பொருளாட்சியின் பயனாவது அறத்தைச்செய்து இன்பத்தை நுகர்தல்; எவர்மாட்டுங் கண்ணோடாமை நடவுசெய்தன் முறைமையாவது; ஆராய்ந்து அரசினையாள்வான் *மனத்தாலாராயாது ஒன்றனையுஞ் செய்தலில்லை; எ-று. (௬௫)

௬௬ கள்ளி னிடும்பை களியறியு நீரிடும்பை
புள்ளினு ளோங்க லறியு மிரப்பிடும்பை
பல்பெண்டி ராள னறியுங் கரப்பிடும்பை
கள்வ னறிந்து விடும்.

இ-ள்; கட்பெறாமையான்வரும் இடும்பையைக் கள்ளுண்டு களிப்பவன் அறியும்; நீர்பெறாமையான் வரும் இடும்பையைப் புள்ளினுள் வைத்துச் சாதகப்புள்ளறியும்; பொருளைத்தேடும் இடும்பையைப் பல்பெண்டிராளன் அறியும்; காத்தலருமையின் கண்வரும் இடும்பையைக் கள்வன் அறியும்; எ-று. (௬௬)

௬௭ வடுச்சொ னயமில்லார் வாய்த்தோன்றுங் கற்றார்வாய்ச்
சாயினுந் தோன்றா கரப்புச்சொற் றீய
பரப்புச்சொற் சான்றோர்வாய்த் தோன்றா கரப்புச்சொற்
கீழ்கள்வாய்த் தோன்றி விடும்.

இ-ள்; பிறர்க்குப் பழியாயின கூறுதல் ஈரமில்லாதார் வாயிற் றோன்றும்; கற்றார்வாயின்கட் சாயினும் உளவாகா வஞ்சனைச்சொல்; தீயவற்றைப்பரப்புஞ்சொல் அமைந்தார்வாயின்கட் டோன்றா; இரந்தார்க்கு இல்லையென்னுங் கரப்புச்சொற் கீழ்மக்கள்வாயின்கட் டோன்றும்; எ-று. (௬௭)

௬௮ வாலிழையார் முன்னர் வனப்பில்லார் பாடிலர்
சாலு மவைப்படிற் கல்லாதான் பாடிலன்
†கற்றா னொருவனும் பாடிலனே கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின்.

இ-ள், வாலிய அணியையுடைய மகளிர்முன்னர் அழகில்லாதார்பெருமையிலர்; நிரம்பிய அறிவினையுடைய அவையிற்புக்காற் கல்லாதான் பெருமையிலன்; கற்றவனும் பெருமையிலன் கல்லாதார் முன்னரும்: பேதையார் முன்னரும்; எ-று. (௬௮)

* 'கருத்தின்நாடாது' எனவும் பாடம்.

† கற்றானொருவனும் கல்லாதார் முன்னர்ப்படிற் பாடிலனே எனவும், கற்றானொருவனும் பேதையார்முன்னர்ப்படிற்பாடிலனே எனவும் பிரித்து முன்னவற்றோடு நான்காக்குக.

கூகூ மாசு படினு மணிதன்சீர் குன்றாதாம்
பூசிக் கொளினு மிரும்பின்கண்—மாசொட்டும்
*பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்.

இ-ள்; நன்மணி மாசுபட்டனவாயினுந் தன்விழுப்பங் குன்றாதாம்; கழுவிக்கொள்ளினும் இரும்பின்கண் மாசடையும்; தளைமுதலாயினவற்றுள்ளிட்டு ஒறுப்பினும்: அறிவுகொளுத்தி அவனறிவை விளக்கினும் கீழாயினான் றன்செய்கைகளாங்கீழ்மையைக் காட்டிவிடும்; எ-று. (கூஎ)

க00 எண்ணெக்குஞ் சான்றோர் ம[illegible]
புன்னெக்கும் போற்[illegible]
யாழொக்கு நட்டார் கழறுஞ்சொல் [illegible]
பண்புடையா [illegible].

[illegible] அறிவினையொக்கும் மருவியமைந்தாரை நீங்காமை; புன்னையொக்கும் பகைவருடன் உறைந்தொழுகுதல்; பண்ணிய யாழோசையை யொக்கும் நட்டார்கழறுஞ்சொல்; குணமுடைய மனையாளை இல் [illegible] மனை பாழினையொக்கும்; எ-று. ([illegible])

க0க ஏரி சிறிதாயி னீருரு மில்லத்து
வாரி சிறிதாயிற் பெண்ணூரு மேலைத்
தவஞ்சிறி தாயின் வினையூரு மூரு
முரன்சிறி தாயிற் பகை.

இ-ள்; குளஞ்சிறிதாயின் நீர்போம்; மனையிற்புகும வருவாய் சிறிதாயின் மனையாள் கொழுநனை மதியாது மேற்கொள்ளும்; முன்னாட்செய்த தவஞ்சிறிதாயிற் றீவினைவந்து மேற்கொள்ளும்; ஒருவன் வலி சிறிதாயிற் பகைவந்தடரும்; எ-று. (கக)

நான்மணிக்கடிகை மூலமும் உரையும்.

முற்றின.

---

* கீழ் தன்னைப்பாசத்துளிடினும் மாசுடைமை காட்டிவிடும் எனவும் கீழ் தன்னை விளக்கினும் மாசுடைமை காட்டிவிடும் எனவும் பிரித்து மூன்னவற்றோடு நான்காக்குக.

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்

## விற்கப்பெறும் புத்தகங்கள்.

### சங்கப்பதிப்பு.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | [illegible]றுபிர [illegible] மூலமும் உரையும். ... | 1 | 0 | 0 |
| | [illegible] சவயஞ்சரி ... | 1 | [illegible] | [illegible] |
| | [illegible]ப்பு [illegible] (சங்கப்பெருமான [illegible] பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தவை)... | 0 | 8 | 0 |
| 4. | வைத்திய சாரசங்கிரகம் ... ... | 3 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... | 2 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 3 | 0 | 0 |
| 7. | தோத்திரத்திரட்டு ... ... | 0 | 2 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி (உயிர்வருக்கம் முடிய முதற்பாகம்) ... ... | 6 | 0 | 0 |
| 9. | அபிதானசிந்தாமணி ... ... | 7 | 0 | 0 |
| | சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு செலெக்ஷன் ... ... | 0 | 4 | 0 |

### செந்தமிழ்ப் பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| *1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| *2. | கனாநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்)... | 0 | 3 | 0 |
| *3. | வளையாபதி செய்யுட்கள் | | | |
| *4. | புலவராற்றுப்படை (திருக்குருகூர் இரத்தின கவிராயர் இயற்றியது.) ... ... | 0 | 3 | 0 |
| *6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... | 0 | 12 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது உரையுடன் ... | 0 | 4 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | அநுமான விளக்கம் | ... ... | 0 | 4 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் | ... ... | 0 | 1 | 0 |
| *11. | விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் | ... ... | 0 | 6 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | ... ... | 0 | 4 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | ... ... | 0 | 3 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் | ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | ... ... | 0 | 4 | 0 |
| 17. | சுகசந்தர்சன தீபிகை | ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் | ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் | ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்.) | ... ... | 0 | 6 | 0 |
| 22. | திருக்கலம்பகம் (ஷை) | ... ... | 0 | 6 | 0 |
| †23. | விக்கிரமசோழனுலா | ... ... | 0 | 2 | 0 |
| †24. | குருமொழிவினவிடை | ... ... | 0 | 1 | 0 |
| †25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை | ... | 0 | 1 | 0 |
| †26. | திருத்தணிகைத் திருவிருத்தம் | ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | ... ... | 0 | 3 | 0 |
| 28. | சந்திராலோகம் | ... ... | 0 | 2 | 0 |
| 29. | சோழவம்ச சரித்திரச்சுருக்கம் | ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானமிர்தக்கட்டளை | ... ... | 0 | 2 | 0 |
| 31. | பாண்டியம் | ... ... | 0 | 4 | 0 |

## வேறு பதிப்பு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மணிமேகலை | ... ... | 5 | 0 | 0 |
| 2. | பாரதச்சுருக்கவசனம் | ... ... | 1 | 8 | 0 |

* ஸ்டாக் இல்லை. † சீக்கிரம் வெளிவரும்.

# Peragattiya Tirattu

## WITH ANNOTATIONS

BY

Rao Sahib S. BAVANANDAM PILLAI

F.R.H.S. (Lond.) and M.R.A.S. (Lond.)

*"Grammar, though a difficult study, is absolutely necessary in the search after philosophical truth . . . and is no less necessary in the most important questions concerning religion and Civil Society."*—Horne Tooke.

*All Rights Reserved.*

Madras

PRINTED AT THE S.P.C.K. PRESS, VEPERY

1912

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்
தஞ்சாவூர்

